பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 32 வெள்ளிக்கிழமை 14.06.2024 கதிர் 219

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களைச் சந்திக்கவென யாழ்ப்பாணம் வந்த ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க புளொட்தலைவர் சித்தார்த்தனையும் அவரது வீட்டில் சந்தித்துப் பேசியிருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைத் தன் பக்கம் திருப்புவதற்கான முயற்சியாகத்தான் அவரின் இந்தச் சந்திப்பும் அமைந்திருந்தது.

கடந்த காலங்களில் ஜேவிபி தமிழர்களுக்குச் செய்த படுபாதகச் செயல்களின் காரணமாக தமிழர்களின் ஆதரவைதான் பெற்றுக்கொள்வது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பது ஜேவிபிக்கும் தெரியும். அது பற்றி முக்கியமான தமிழ் தலைவர்கள் ஜேவிபி தலைவருக்கு தனிப்பட விளக்கமளித்துள்ளார்கள் என்று அறிய முடிந்தது. உங்களுக்கான தமிழ் மக்களிடம் நாம் போய் வாக்குக் கேட்கக்கூடிய நிலை ஒன்று இன்றில்லை, அப்படிப் போனால் எங்களது அரசியலே ☞ 2

# 13 பற்றிய உரையாடல் ஐக்கியத்தை குலைக்கும்

## கிழக்கு முன்னாள் ஆளுநர் முட்டுக்கட்டை

அரசமைப்பின் 13ஆவது திருத்தம்சம்பந்தமாகமீண்டும் ஏற்பட்ட உரையாடலானது பொதுமக்களிடையேயிருக்கும் ஐக்கியத்தை சீர்குலைப்பதாக அமைந்துள்ளது என்று சர்வஜன அதிகாரம் கூட்டணியின் அங்கத்தவரும், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான அநுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார். கொழும்பில்செய்தியாளர் ☞ 2

## மாகாண ஆளுநர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

மாகாணஆளுநர்களுடன்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அரசியல் நிலை தொடர்பில் கலந்துரையாடினார். ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாகாணமட்டத்தில்உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாகத் தீர்க்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உறுமய காணி உறுதி வழங்கும் திட்டத்தின் வினைத்திறன் என்பன குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

உறுமய காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கு ☞ 2

## ஆட்சிக்கு வந்ததும் மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

### சஜித் நேற்று வாக்குறுதி

ஆட்சிக்கு வந்ததும் மண்டைதீவில்சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

நான் இங்கு வந்து பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றேன். இதனை நாட்டின் ☞ 2

## இனங்களிடையிலான நம்பிக்கையின்மைதான் 13ஐ நிறைவேற்றுவதற்கான பிரதான தடை

### எதிர்க்கட்சித் தலைவர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு




இனங்கள் இடையிலான நம்பிக்கையின்மைதான் அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கானபிரதானதடைஎன்றுஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின்13ஆவதுதிருத்தச் ☞ 2

## கிராம அலுவலர்களின் புதிய சேவை யாப்புக்கு அனுமதி

### இராஜாங்க அமைச்சர் பிரியந்த தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் கிராம உத்தியோகத்தர்களின் புதிய சேவை யாப்பு அரச சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள் ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

தற்போது, ஆளும் தரப்பு 'உறுமய' மற்றும் 'அஸ்வெசும' உள்ளிட்ட பலமுக்கியதிட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அத்துடன்கடந்தகாலத்தில் நிறுத்தப்பட்ட ☞ 9

## ரணிலின் வெற்றியே மக்களின் வெற்றி

### இப்படிச் சொல்கிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியிலேயே மக்களின் வெற்றி தங்கி இருக்கிறது. ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற்றால் மாத்திரமே நாட்டு மக்களுக்கு நாட்டின் நன்மைகளை அனுபவிக்கமுடியுமாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்குதெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தைக்கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட 336 ☞ 2

## இந்தியாவில் கரையொதுங்கிய மீனவர்களை மீட்க நடவடிக்கை

### மீன்பிடித்துறை அமைச்சர் அறிவிப்பு

காலநிலை சீர்கேடு மற்றும் இயந்திரக் கோளாறு போன்றவை காரணமாகஇந்தியாவின் தமிழ்நாட்டில் கரையொதுங்கிய அனலைதீவு கடற்றொழிலாளர்களை இலங்கைக்குஅழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அனலைதீவு கடற்பரப்பில் இருந்து கடந்த ஜூன்மாதம்10ஆம்திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் கடற்றொழிலுக்குசென்ற குறித்த இருவரும் கரை திரும்பாத காரணத்தினால் பதற்றம் ஏற்பட்டிருந்தது டன், அனலைதீவு கடற்பரப் பெங்கும் கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர்களால் தீவிர தேடுதல் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், தேடப்பட்டுவந்த இருவரும் தமிழக கடற்பரப்பில் கரையொதுங்கியதகவல் கிடைக்கப்பெற்றது.

இந்நிலையில்குறித்த இருவரது குடும்பத்தினர் நேற்றுவியாழக்கிழமை (13) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இருவரையும் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், கடற்றொழில் அமைச்சரினால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## பொருளாதாரப் பரிமாற்றச் சட்டமூடாக 2027இல் வேலையின்மை குறையும்

### இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி ரணில்

பொருளாதார பரிமாற்ற சட்டத்திற்கூடாக இதன் ஊடாக 2027 ஆம் ஆண்டிற்குள் வேலையின்மையைக் குறைக்க முடியும் என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இளைஞர் படையணியின் இளைஞர் யுவதிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு மேலும் தெரிவித்தாவது:

இளைஞர்படையணி ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்களாகின்றன. அன்றிருந்தபொருளாதார, சமூகமுறைமைக்குஏற்ற வகையில்இந்தஇளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்டது. காலத்துக்கு ஏற்ப இளைஞர் படையணியும் மாற வேண்டும். இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தைஏற்படுத்திக் கொடுக்க, நல்லவருமான நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு இளைஞர் படையை மாற்றுவதற்குத் தேவையானநடவடிக்கைஎடுக்க வேண்டும்.

இளைஞர்கள் அதிக வருமானம் ☞ 2

## ஊடகவியலாளர் வீடு மீது தாக்கு; விசாரிக்க 4 பொலிஸ் குழுக்கள்

### வன்முறைக்கும்பலின் செயலுக்குக் கண்டனமும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்-அச்சுவேலியில் ஊடகவியலாளரின் வீட்டின் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தி தீ வைத்த சம்பவம் தொடர்பாக வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பிரகாரம் வடக்குமாகாணசிரேஷ்ட பொலிஸ்மாஅதிபரின்கீழ் இயங்குகின்ற நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளில் இறங்கியுள்ளன. இதே நேரம் ஊடகவியலாளர் தாக்கப்பட்டதற்கு அரசியல் கட்சிகள் உட்படப் பல தரப்பினரும் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார்சைக்கிள்களில் வந்தஐந்துபேர்கொண்ட வன்முறைக்கும்பல் தாக்குதல் நடத்தியது.

வீட்டிற்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள்மற்றும்முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் பொருட்களுக்குத் தீ வைக்கப்பட்டது.

'திருநங்கைளை தவறாக சித்தரிக்காதே' என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள வீட்டில் போடப்பட்டிருந்தன.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளைஆரம்பித்துள்ளனர்.

பொலிசாரின் தடயவியல் பிரிவினர் சம்பவஇடத்திற்குவருகை தந்து தடயங்களைச் சேகரித்தனர். வாகனங்களை எரிக்க ☞ 8

## நாணய நிதியத்தின் 3ஆம் கட்ட கடனை இலங்கைக்கு வழங்க அனுமதி கிட்டியது

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்டக் கடன் நிதியை இலங்கைக்கு வழங்குவதற்கான அனுமதி நிதியத்தின்நிறைவேற்றுச் சபையால் வழங்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நிதி அமைச்சின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் ☞ 8

## இனி இது .....

முடிந்துபோய்விடக்கூடிய ஆபத்து இருக்கின்றது என்பதை அந்தத் தமிழ்த் தலைவர்கள் ஜேவிபியிடம் ஏற்கனவேபுரியவைத்திருக்கிறார்கள். கள யதார்த்தத்தை அனுரவும் புரிந்துகொண்டிருக்கின்றார்.

என்றாலும், முயற்சி செய்வதில் குற்றம் ஒன்றும் இல்லையே என்கிற பாணியில்தான் அவர் யாழ்ப்பாணத்திற்கு வந்து தமிழ்த் தலைவர்களுடன் பேசினார். தமிழ் அரசுக்கட்சியினரைச்சந்திப்பதுதான் அவரது திட்டம். அத்தோடு சேர்த்து சித்தார்த்தனையும் அவர் பார்த்துப் பேசினார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சந்திப்பது அனுரவின்நோக்கமாகஇருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், சித்தார்த்தனை சந்திப்பதில் அவர் தீவிரமாக இருந்தார். அதற்கொரு பின்னணிக் கதை உண்டு.

ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாப ராஜபக்ச நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்கு நாடாளுமன்றத்தின் மூலம் ஒருவரை நியமிப்பதற்கான போட்டி ஏற்பட்டபோது அதில் ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப் பெரும, அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் போட்டியிட்டனர். ராஜபக்சக்கள் மற்றும் மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் ரணில் போட்டியில் நின்றார். மொட்டில் இருந்து பிரிந்தவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின்ஆதரவுடன்டலஸ் அழகப் பெரும போட்டியிட்டார். மூன்றாவதாகவும்தனித்துவமாகவும் அனுரகுமாரவும் போட்டியிட்டார்.

இந்த மூவரில் யாரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிப்பது என்கிற கேள்வி வந்தபோது டலஸ் அழகப் பெருமவை ஆதரிப்பது என்கிற முடிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு முடிவுக்கு வந்தது. இந்த விடயங்கள் நடந்துகொண்டிருந்த ஒரு நாளில் நாடாளுமன்றக் கட்டடத்தில் அனுரகுமாரவைச் சந்தித்த புளொட் தலைவர் சித்தார்த்தன், ஜனாதிபதியை நியமிப்பதற்கான இந்தப்போட்டியில் தான் அனுரகுமாரவை ஆதரித்து வாக்களிக்கப் போகிறார் என்று அவரிடமே நேரில் தெரிவித்தார்.

சித்தார்த்தனின் வார்த்தைகள் அனுரவுக்குஆச்சரியம்அளித்தாலும், அன்றிருந்தநிலையில்ரணிலுக்கும் டலஸுக்கும் இடையிலான போட்டி நெருக்கமாக இருக்கும் என்று தோன்றியதன்காரணமாக, எதிரிக்கு எதிரி நண்பன் என்கிற வகையில் டலஸ்தோற்றுவிடாமல்சித்தார்த்தன் வாக்களிப்பதே நல்லது என்று அனுர அப்போது கூறியிருக்கிறார்.

அந்தப் போட்டியில் ரணில் வெற்றிபெற்றார். தனக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்களும்கூட வாக்களித்தார்கள் என்று பின்னர் அது பற்றி ரணில் வெளியில் சொன்னார். எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு டலஸுக்கு வாக்குகள் கிடைக்கவில்லை.அனுரகுமாரவிற்கு 3 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. வாக்களிப்பு முடிந்த பின்னரும் அனுரவைச் சந்தித்த சித்தார்த்தன், அவரிடம் ''உங்களுக்கு மூன்று வாக்குகள்கிடைத்திருக்கின்றனவே, நீங்கள்யாருக்கு வாக்களித்தீர்கள்?" என்ற கேள்வியைக் கேட்டுள்ளார். அதற்கு ''நான் எனக்குத்தான் வாக்களித்தேன்'' என்று அனுர பதலளித்துள்ளார். உடனே ''உங்களுக்கு நீங்கள் வாக்களிக்கும்போது என்னை ஏன் வாக்களிக்கவேண்டாம் என்று தடுத்தீர்கள்?'' என்று சித்தார்த்தன் அவரிடம் அன்புரிமையோடு கடிந்துகொண்டிருக்கின்றார்.

இந்த அன்பு இப்போதும் சித்தார்த்தனிடம் இருக்கக்கூடும், இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர்தனக்குச்சார்பாக ஒருவேளை முடிவெடுக்கக்கூடுமோ என்கிற நப்பாசையில்தான் சித்தார்த்தனைச் சந்தித்தார் அனுர. புளொட்டின் புலம்பெயர் பலத்தின் சூழ்நிலைக் கைதியாக இப்போது மாறியிருக்கும் சித்தார்த்தனால் இப்போது அனுரவுக்குக்கைகொடுக்கமுடியாது என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லைத்தானே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 13 பற்றிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம்அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் தற்போது ஐக்கியத்துடனேயே உள்ளனர். அவர்கள் பரஸ்பர புரிதலுடன் வாழ்ந்துவருகின்றனர். இவ்வாறான நிலையில் தற்போது 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமான உரையாடல் ஆரம்பமாகியுள்ளது.

உண்மையில் இந்த உரையாடலானது, இனங்களுக்கு இடையில் பிளவுகளையே ஏற்படுத்துவதாக அமையப்போகின்றது. ஆகவே இந்த விடயத்தினை தொடர்ச்சியாக முன்னெடுப்பதைநாம்வன்மையாக கண்டிக்கின்றோம்.

அத்துடன், பொதுமக்கள் இதுவரையில்மாற்றுஅணியொன்று இல்லாமையினால்நெருக்கடிகளைச் சந்தித்தார்கள். தற்போது மாற்று அணியாக சர்வஜன அதிகாரம் தோன்றிவிட்டது.ஆகவேஜூன்18ஆம் திகதி முதல் நாம் பொதுமக்களை நேரில்சந்திக்கவுள்ளோம். அதற்காக முதற்கூட்டம் நுகேகொடவில் நடைபெறப்போகின்றது என்றார்.

## மாகாண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிகமாக மற்றுமொரு குழுவிற்கு அதிகாரத்தை வழங்கி நடமாடும்சேவைகளைநடைமுறைப் படுத்துவதற்கான சாத்தியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் மக்களை ஆர்வமூட்டி, அவர்களுக்கு அந்த நன்மையை வழங்க வேண்டிய பொறுப்புபிரதேசசெயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நினைவு கூர்ந்தார்.

மாகாண மட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த, தேசிய பாடசாலைகளுக்கு 2500 புதிய ஆசிரியர் நியமனங்களை ஜூலை 03ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் படி, இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், கணிதம், தொழில்நுட்பம், சர்வதேசமொழிகள் ஆகியபாடங்களுக்கு 2100 ஆசிரியர் நியமனங்களையும், 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில மொழிமூல உயர் டிப்ளோமா பரீட்சைப்பெறுபேறுகளின்அடிப்படையில் 500 ஆசிரியர்களை நியமிக்கவும்ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

அதன் மூலம் தேசிய பாடசாலைகளில் குறித்த பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர் வெற்றிடங்கள் பெருமளவில் நீங்கும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார். அத்துடன், ஆங்கில மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது ஓய்வு பெற்ற ஆங்கில மொழிமூல ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் கல்வி சேவை ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் துரித வேலைத்திட்டம் ஒன்று அமுல்-படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தை துரிதப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

முதலாம் தரம் முதல் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம்மாணவர்களுக்கானஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்திற்கு 16,152 புலமைப்பரிசில்களும், வடமாகாணத்திற்கு 8,636 புலமைப்பரிசில்களும், ஏனைய மாகாணங்களுக்கு 10,000 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், ஒரு மாதத்திற்கு ரூ.3,000- வீதம் 12 மாதங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

மேலும்,க.பொ.த உயர்தரம் கற்கும்குறைந்தவருமானம்பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு மாதம் 6,000 ரூபா வீதம் 24 மாதங்கள்புலமைப்பரிசில்வழங்கும் திட்டத்தின் பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளதாகவும்,கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2000 மாணவர்களுக்கானபுலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

அதற்கு இணையாக, மாவட்ட மட்டத்தில்புலமைப்பரிசில்வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதுடன் புலமைப்பரிசில் வழங்கும் தினத்திலேயே, நிலுவைத் தவணையுடன் உரிய பணம் மாணவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். அதன்பின், ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில், ழுடெஷ்நெ முறையில்மாணவர்களின்கணக்கில் உரிய புலமைப்பரிசில் தொகை நேரடியாக வரவு வைக்கப்படும்.

வரலாற்றில் முதன்முறையாக பிரிவெனா, சில்மாதா கல்வி நிலையங்களில் பயிலும் பிக்குமார், பிக்குணிகள் , மற்றும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன்,விண்ணப்பங்கள் கோரல் முடிவடைந்ததையடுத்து புலமைப்பரிசில்கள் வழங்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்படும். க.பொ.த உயர் தரத்தில் தகவல் தொடர்பாடல், தொழிநுட்பம் பாடம் கற்கும் மாணவர்களுக்கானபுலமைப்பரிசில்வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

இந்தஅனைத்துபுலமைப்பரிசில் கொடுப்பனவுகளுக்காகவும் வருடமொன்றுக்கு 5100 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும், அதற்கான முழுத் தொகையும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஏற்கனவேஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த புலமைப்பரிசில் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் வெற்றியடையச் செய்வதில் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளபொறுப்புகுறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## ஆட்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து இடங்களிலுமே முன்னெடுத்து வருகிறேன்.

நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தாலும்எமதுமக்களுக்கானை தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றேன்.

இவ்வாறு பாடசாலைக்கு, வைத்திய சாலைக்கு என உதவிகளை செய்வது தேர்தலுக்காக அல்ல. அது எனது நீண்ட நாள் திட்டம். இதற்கமையவே நீண்ட காலமாக அனைத்து இடங்களிலும் இதனைஒரு பணியாகச் செய்து வருகின்றேன்.

நான்இங்குவந்துமைதானத்தில் கதைத்த ஒரு விடயத்தை சிலர் சர்ச்சையாக்கியுள்ளனர். திட்டமிட்ட வகையில் அதனை வைத்து பிரச்சாரங்களைம் திட்டமிட்ட வகையில் முனெடுத்முய வருகின்றறனர்.

குற்பபாக நல்லாட்சி ஆட்சி காலத்தில் மண்டை தீவில் சர்வதேச கிறிக்கெற் விளையாடு மைதானத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்தன அதன் நினைவில் தான் மைதானம் தொடர்பாக இளைஞ்ஞர்களிடம் வினாவினோன் ஆனால் மண்டை தீவு என நினைவுக்கு வரவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதற்கட்டமாக இந்த மைதானத்தை அமைப்போம். - என்றார்.

## பொருளாதாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தொழில்களை விரும்புகிறார்கள். எனவே, அந்த நிலையை உருவாக்குவதற்கான திட்டங்களைஉருவாக்கவேண்டும். அதற்காக நாடாளுமன்றத்தில் பொருளாதார பரிமாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் ஊடாக 2027 ஆம் ஆண்டிற்குள் வேலையின்மையைக் குறைக்க முடியும்.

2035 ஆம் ஆண்டிற்குள் அதிக வருமானம் தரும் பல தொழில் துறைகளைஉருவாக்கலாம். 2048 ஆம்ஆண்டுக்குள்வளர்ச்சியடைந்த நாடொன்று உருவாகும். இன்று இங்கு இருக்கும் இளைஞர் படையணி மாணவர்களுக்கு அப்பொழுது 50 வயதுகூட ஆகியிருக்காது.

புதிய பொருளாதாரத்தை உருவாக்கத் தேவையான திட்டத்தைசெயல்படுத்தவேண்டும். வியட்நாம், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைஅடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியில் நாம் கவனம்செலுத்தவேண்டும்.எனவே, ஏற்றுமதிசார்ந்தபொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விரைவாக அபிவிருத்தி செய்யக்கூடிய துறைகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். சுற்றுலாத் துறை, விவசாயத் துறை, தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கான அவசரத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்காக இளைஞர் படையணி மாணவர்களை வழிநடத்த வேண்டிய தேவை உள்ளது.

பசுமை சமுதாயம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம், எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் அறிவும் பயிற்சியும் கொண்ட இளம் தலைமுறையை உருவாக்க தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். தொழில் பயிற்சி பெற்ற இளைஞர்களை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்' என்றார்.

## இனங்களிடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம்என்பதுஎமதுசட்டப்புத்தகத்தில் இன்று நேற்று வந்த விடயமல்ல. 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது ஏன் பிரச்சினை வருகின்றது? நம்பிக்கையின்மையே அதற்கான பிரதான காரணமாகும்.

தமிழ் மொழிபேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்கள மக்கள் மீது நம்பிக்கையின்றிச் செயற்படுகின்றனர். சிங்கள மக்களும் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது நம்பிக்கையின்றிச் செயற்படுகின்றார்கள். ஒவ்வொருவரும் நம்பிக்கையற்ற நிலையிலேயே உள்ளனர். அதுவே இங்குள்ள பெரும் பிரச்சினை.

ஆகவே அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதன் ஊடாகவே நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். கமராக்களுக்காக அதனை ஏற்படுத்தாது மனதளவில் அதனை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவும், நீங்கள் பிரதமராகவும் பதவியேற்கவுள்ளதாகவும் அதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்தல்லவா? என்று கேட்கப்பட்டபோது

இந்த விடயத்தினை இட்டு நான் மிகவும் கவலை அடைகின்றேன். எமது நாட்டில் அரசியல் கலாசாரம் மிகுந்த கீழ் மட்டத்தில் உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுடன் எனக்கு எந்தவிதமான தனிப்பட்ட பிரச்சினைகளும் இல்லை. ஆனால் அவர் புதிய லிபரல்வாத பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்கின்றார்.

நான் மனித நேய ஜனநாயகம், சமூக ஜனநாயகத்துடன் பயணிக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்க செல்வந்தர்களை போசிக்கின்றார். அதேபோன்று ராஜபக்சவினரின் காவலாளியாகவும்செயற்படுகின்றார்.

நாம் நாட்டை பொருளாதார ரீதியாக வீழ்த்தியவருக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் சென்றோம். அவ்விதமாகச் செயற்பட்ட நான் எவ்வாறுரணில்விக்கிரமசிங்கவுடன் 'டீல்'போட முடியும் என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மில்லியன் டொலர் நிதி உதவிக்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய ஆளும்தரப்புநாட்டின்பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தை முறையாக மேற்கொண்டு அதன் இலக்கை அடைந்திருக்கிறது.

அதேபோன்று நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரித்துள்ளது. பணவீக்கம் குறைவடைந்துள்ளது. அதன் பிராரம் நாடு நல்ல நிலையில் சென்று கொண்டிருக்கிறது என நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்க சில கடுமையான தீரமானங்களை எடுத்திருந்திருந்தார். ஆனால்நாட்டின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திர நிலைக்கு வந்துள்ளதால்., தற்போது மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அந்த வகையில் குறைந்த வருமானம் உள்ள 24இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும நிவாரணதிட்டம்வழங்கிஇருக்கிறது. அதேபோன்று வெளிநாட்டு செலாவணி கையிருப்பு அதிகரித்து வருவதால், ரூபாவின் பெருமதி அதிகரித்துவருகிறது. அதன்பிரகாரம் பொருட்களின்விலைஇருந்ததைவிட குறைவடைந்துள்ளது.

ஆளும் தரப்பின் இவ்வாறான வேலைத்திட்டம் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட நிதி உதவி கிடைப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கிறது. எனவே இந்த வேலைத்திட்டங்களை அவ்வாறே தொடர்ந்து முன் கொண்டு செல்ல முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமேயாவார். இந்த வேலைத் திட்டத்தை மாற்றியமைத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

இந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேரதல் இடம்பெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் மக்கள் எடுக்கும் தீர்மானத்திலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. நாடு வீழ்ச்சியடைந்திருந்தபோது, நாட்டைப் பொறுப்பேற்க அன்று முன்வராத தலைவர்கள் தற்போது, நாடு ஸ்திர நிலைக்கு வரும்போது, தங்களுக்கு அதிகாரத்தை வழங்குமாறு பரப்புரை செய்து வருகின்றனர். மக்கள் இவர்களின் பொய் வாக்குறுதிகளுக்கு ஏமாறாமல் ரணில் விக்ரமசிங்கவை வெற்றிவெறச் செய்ய வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# சமுர்த்தி இயக்கத்திற்கு மீள புத்துயிர் அளிக்கும் திட்டம்



அரசியல் தலையீடுகள் மற்றும் பல்வேறு கோரிக்கைகளால் பின்னடைவைச் சந்தித்த சமுர்த்தி இயக்கத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி இயக்கம் புத்துயிர் பெறுவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி வங்கியின் தலைமையகம் மற்றும் சமூக வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் கம்பஹா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

புதிய திட்டமானது 'புதிய கிராமம் - புதிய நாடு' என்று பெயரிடப்பட்டுள்ளது, இது ஒரு சாதகமான காரணி நிலையில் இருந்து உற்பத்தி நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது. அதற்கான மூலோபாய செயற்பாடுகளை அடையாளம் காணும் செயற்பாடுகள் மாவட்ட மட்டத்தில் இன்று இடம்பெற்று வருகின்றன. அதன்படி சமுர்த்தி இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை களப் பொறுப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். புதிய திட்டத்தை செயல்படுத்துவதில் எழும் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்குவதே இதன் நோக்கம் ஆகும்.

இந்த நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட முக்கிய திட்டங்களில் சமுர்த்தி இயக்கமும் ஒன்று. அதற்காக அரிசி பங்கீட்டு முறை, உணவு முத்திரை முறை, ஜனசவிய திட்டம், சமுர்த்தி மற்றும் அஸ்வெசும திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

சமுர்த்தி இயக்கத்தை வலுப்ப டுத்தும் திட்டம் இரண்டு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. இது ஒரு முன்னோடி திட்டம் மற்றும் தேசிய திட்டமாகும்.

வலுவூட்டல் முன்னோடித் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி, உலக வங்கி நிதியுதவி மற்றும் ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 03 நிதியுதவியின் கீழ் முன்னோடித் திட்டம் செயல்படுத தப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவி முன்னோடித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 13 மாவட்டங்களில் அமைந்துள்ள 64 பிரதேச செயலகப் பிரிவுகளிலும், 400 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 10,000 குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் காலம் இரண்டு ஆண்டுகள். அதற்காக 2,223.14 மில்லியன் ஷரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு பயனாளிக்கு ஒதுக்கப்பட்ட தொகை 150,000 ஷரூபா. களுத்துறை, குருநாகல், கேகாலை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

உலகவங்கியின் நிதியுதவியுடன் முன்னோடித் திட்டம் 74 பிரதேச செயலகப் பிரிவுகளிலும், 395 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அம்பாறை, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்கள் ஆகும். இதன் கீழ் 6,000 குடும்பங்கள் பயன்பெறும். இத்திட்டம் 2027 வரை செயல்படும். இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2,560 மில்லியன் ரூபாவாகும்.

ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் முன்னோடி திட்டத்திற்கு இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அம்பாறை, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஆறு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மற்றும் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படும். அதற்காக 8,400 மில்லியன் ஷரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய திட்டத்தின் கீழ் 12 இலட்சம் 'அஸ்வெசும' நலன்புரி பயனாளி குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் கீழ் 2024 ஆம் ஆண்டில் 03 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த தேசிய வேலைத்திட்டம் முழு நாட்டையும் உள்ளடக்கியது. இந்த ஆண்டிற்காக திறைசேரி 14,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த கலந்துரையாடலில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க -

'இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கான பிரதான இயக்கம் சமுர்த்தி இயக்கம். இது மானியத் திட்டமாக மட்டுமின்றி சமூக நலத் திட்டமாகவும் செயல்படுத்தப்பட்டது. சமுர்த்தி இயக்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த சமுர்த்தி இயக்கத்தை பாதுகாப்பது இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களின் கடமையும் பொறுப்பும் ஆகும். அதனால்தான் சமுர்த்தி இயக்கத்திற்கு மீண்டும் புத்துயிர் வழங்க அரசாங்கம் தீர்மானித்தது. இதற்காக பிரதமர் தலைமையில் குழுவும் நியமிக்கப்பட்டது. கடந்த காலங்களில் சமுர்த்தி இயக்கம் சிறப்பாக இயங்கி வந்தது. ஆனால் பல்வேறு அரசியல் தவறுகளாலும் பல்வேறு மக்கள் தேவைகளாலும் பின்னடைவை சந்தித்தது. சமுர்த்தி இயக்கத்தை புத்துயிர் பெறச் செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார். ஏனெனில் இந்தச் சூழ்நிலை புரிந்து கொள்ளப்பட்டது' என்றும் கூறினார்.

இந்நிகழ்வின் போது, கம்பஹா மாவட்ட செயலாளர் லலிந்த கமகே, கம்பஹா பிரதேச செயலாளர் கே.ஏ.எஸ் எல். குணதிலக்க, சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் சி.டி.களுஆராச்சி, கம்பஹா மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஜே.ஏ.டி.எஸ். ஜயசிங்க மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி வங்கியின் தலைமையகம் மற்றும் சமூக வங்கி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர .(05)

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை திறப்பு திகதியில் மீண்டும் மாற்றம்?

## இந்துக்கள் மத்தியில் குழப்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை திறக்கப்படும் திகதியில் மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அதாவது இப் பாதை திறக்கப்படும் திகதி ஜூலை 2 ஆம் திகதி எனக் கூறப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கதிர்காமத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இத் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது ஜூலை 2 ஆம் திகதி திறக்கப்பட்டு 14 ஆம் திகதி மூடப்படும் என்று மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்னாயக்க அறிவித்திருக்கிறார்.

இதனால் பாதயாத்திரை மேற்கொள்ளும் இந்து அடியார்கள் குழப்பமடைந்துள்ளனர்.

குறித்த நான்கு நாள்களில் காட்டைக் கடந்து கொடியேற்றத்திற்குச் செல்ல முடியாது. சாதாரணமாக ஆறு நாள்கள் தேவை. எனவே இந்த நாள்குறைப்பு திட்டமிட்ட ஒரு சதியாகக் கூட இருக்கலாம் என கருதப்படுகிறது.

அந்தக் காலத்தில் இப் புனித யாத்திரை பக்தி பூர்வமாக கொடியேற்றத்திற்கு பத்து நாள்களுக்கு முன்னரே திறக்கப்பட்டு எந்த அன்னதானமோ நீர் விநியோகமோ இல்லாது சிறப்பாக இடம்பெற்று வந்திருக்கிறது. சுமார் 20 நாள்கள் காட்டுப் பாதை திறந்திருக்கும்.

ஆனால் தற்போது செலவைப் பொறுத்து திறக்கப்படும் நாள்கள் தீர்மானிக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை அதுவும் மொனராகலையில் ஒரு திகதி அம்பாறையில் ஒரு திகதி. இதற்காக லாகுகலை பிரதேச செயலகம் நிதி சேகரிக்கின்றது . நீர் வழங்கலுக்காக இன்னும் சில தொண்டு அமைப்புகளும் நிதி சேகரிக்கின்றன. என்ன நடக்கிறது என்பது மக்களுக்கு தெரியாமல் உள்ளது. 'கூட நாள்கள் திறந்தால் செலவு அதிகம்.நாங்கள் மூன்று நாள்களில் சென்றிருக்கிறோம்' என்று கதிர்காமக் கூட்டத்தில் ஓர் அதிகாரி தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

மொத்தத்தில் இம்முறை இவ்வாறாக முரண்பாடு ஏற்பட்டுள்ளமை எதிர்காலத்தில் இப் பாதயாத்திரையை முடக்கும் செயற்பாடாக இருக்கலாமோ என இந்துக்கள் அச்சப்படுகின்றனர்.

ஏலவே, இத் திகதி முதலாம் திகதி என மொனராகலையில் தீர்மானிக்கப்பட்டிருந்ததது. பின்னர் லாகுகல பிரதேச செயலகத்தால் அது ஜ/லை 2 ஆம் திகதி என உகந்தைக் கூட்டத்தில் கூறப்பட்டது.

இதனை காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் சபையில் எழுந்து 'இக்காலம் அறவே போதாது .அது ஒரிருநாள் முந்தி மாற்றப்படவேண்டும். யாத்திரீகர்களின் நலன்கள் கட்டாயம் பேணப்பட வேண்டும்' எனக் கோரிக்கை விடுத்ததன் பலனாக இத் திகதி இம் மாதம் 30 ஆம் திகதி என மாற்றப்பட்டமை தெரிந்ததே. (05)

# கதிர்காம காட்டுப்பாதை திறப்பு குழப்பத்தைத் தீர்த்து வைக்குக

## ஜனாதிபதி ஆளுநரிடம் ஜெயசிறில் வேண்டுகோள்

(வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காமக் காட்டுப்பாதை திறப்பு தினக் குழப்பத்தை தீர்த்து வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் சமய ஆர்வலருமான கி.ஜெயசிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காட்டுப்பாதை திறப்பு தொடர்பாக இரண்டு தினங்கள் ஏலவே அறிவிக்கப்பட்டு தற்பொழுது இறுதியாக ஜூலை இரண்டாம் திகதி என கதிர்காமத்தில் முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது .

இது வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து செல்கின்ற பாதயாத்திரீகர்ளுக்கு அறவே பொருந்தாது. 4 நாள்களுக்குள் கொடி ஏற்றத்துக்கு செல்ல முடியாது .மற்றும் பாதை திறந்து வைக்கப்படுகின்ற கால அவகாசமும் போதாமல் இருக்கின்றது . இப் பாரம்பரிய புனித யாத்திரையை முடக்க திட்டமிடப்படுகிறதோ என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே இந்த பாதயாத்திரை பாரம்பரியமாக நிலைத்து பேணும் வகையிலே முறையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

அது மாத்திரமல்ல இந்த பாதயாத்திரையை வர்த்தமானி பிரகடனம் அறிவித்தல் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (05)

# பாதயாத்திரீகர்களுக்கு விசேட மருத்துவ முகாம்



(வி.ரி.சகாதேவராஜா)

யாழ். செல்வச் சந்நிதி கதிர்காம பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் விசேட மருத்துவ முகாம் கல்லடி விபுலானந்த மணி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ஏற்பாட்டில் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் இவ் விசேட மருத்துவ முகாம் மிசன் சிவபுரியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி.நவலோஜிதன் டாக்டர் ரி.வாமதேவன் உள்ளிட்ட மருத்துவர்கள் பாதயாத்திரை குழுவினருக்கு சிகிச்சை அளித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு ஒரு மாதகாலம் பாதயாத்திரை பூர்த்தி செய்த நிலையில் இம் மருத்துவமுகாம் பெரிதும் உதவியது. இ.கி.மிசனின் இவ் ஜீவசேவைக்கு மனமார்ந்த நன்றிகள் என்று பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயாவேல் சாமி தெரிவித்தார். அவ்வமயம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ,முன்னாள் பட்டிப்பளை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சிவஞானம் அகிலேஸ்வரன் ,உதவி கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஓய்வு நிலை ஆசிரியர் கவிமாமணி சாமி.புண்ணியமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் 75 யாத்திரீகர்கள் இம் மருத்துவமுகாமில் பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதன்கிழமை குழுவினர் களுதாவளையில் தரித்திருந்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சட்டத் திருத்தத்தை உடன் கொண்டுவருவது அவசியம்

**பொது இடங்களில் பாலியல் தொல்லை கொடுப்பதை, குறிப்பாகப் பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுப்பதை குற்றவியல் சட்டங்களின் கீழான தண்டனைக்குரிய குற்றம் ஆக்குவதற்கான சட்டத் திருத்தங்களை நிறைவேற்றுவது காலதாமதமாகி வருவது கவலைக்குரியது.**

**தற்போதுவரை பொது இடங்களில் பாலியல் தொல்லை கொடுப்பவர்களைத் தண்டிப்பதற்குச் சட்டங்கள் இல்லை. மிஞ்சிப்போனால் பொது இடங்களில் இடைஞ்சல் ஏற்படுத்தினார் என்கிற குற்றச்சாட்டைத்தான் ஒருவர் மீது சுமத்த தற்போதைய சட்டங்களில் இடமுண்டு. அதற்கும் கடுமையான தண்டனைகள் இல்லை. இதனால் பொது இடங்களில் குறிப்பாகப் பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்து தமது மலின உணர்வுகளுக்கு வடிகால் தேடிக்கொள்பவர்கள் பலருண்டு.**

**இந்த நிலமை பொதுப் போக்குவரத்தில் பெண்கள் பயணம் செய்வதை ஒரு பேரிடராக மாற்றிவைத்திருக்கின்றது. பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுப்பதையே ஒரு பொழுதுபோக்காக்கொண்டவர்களும் பலர் இருக்கின்றார்கள். பெண்கள் அதிகளவில் படிக்கவும், வேலைக்குப் போகவும் பழகிவிட்ட இந்தக் காலத்தில் அவர்களைத் தொல்லைக்குட்படுத்தும் இதுபோன்ற ஈனர்களைத் கடுமையாகத் தண்டித்து பெண்களின் உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமை. இருப்பினும் இந்த விடயத்தில் ஆளும் தரப்புகள் மெத்தனமாகவே இருக்கின்றன.**

**நாடாளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும் இந்த மெத்தனத்திற்குக் காரணமாக இருக்கலாம். ஏனெனில் பொது இடங்களில் பெண்களுக்குத் பாலியல் தொல்லை கொடுப்பவர்களுக்குக் குற்றவியல் வழக்குகளின் கீழ் தண்டனை விதிப்பதற்கான சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கான அனுமதி 2022 டிசெம்பர் 12 அன்றே அமைச்சரவையால் வழங்கப்பட்டுவிட்டது. ஆனாலும் இதுவரையில் அதனைச் சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னகர்த்தப்படவில்லை.**

**பொது இடங்களில் நிகழும் சம்பவங்கள் உட்பட அனைத்து வகையான பாலியல் துன்புறுத்தல்களையும் குற்றமாக்குவதை நோக்கமாகக் கொண்ட தண்டனைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஒப்புதலையே அமைச்சரவை வழங்கியிருந்தது. நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவின் மீது இந்த அனுமதி வழங்கப்பட்டது.**

**இதனடிப்படையில் சட்டத் திருத்தங்களை அரச வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர் அதனைத் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக முன்வைக்கவேண்டும். ஆனால் அதற்கான முயற்சிகள் தாமதப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டத் திருத்தங்களை எவரும் எதிர்க்கப்போவதில்லை. பொது போக்குவரத்து உள்ளிட்ட பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதில் எல்லோரும் ஒத்த கருத்துடையவர்களாகவே இருப்பார்கள். எனவே இந்தச் சட்டத் திருத்தங்களை அதிகம் சவால் இல்லாமலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கலாம்.**

**எனவே மேலும் கால தாமதம் இன்றி இந்தச் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தின் ஊடாகச் சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆளும் தரப்பு விரைந்து எடுக்கவேண்டும். பொது இடங்களில் பாலியல் தொல்லைகொடுக்கும் கயவர்களைக் கட்டுப்படுத்தி அவர்களுக்குத் தகுந்த பாடத்தைப் புகட்டத்தக்க வகையில் இதுபோன்ற சட்டத் திருத்தங்கள் கடுமையானவையாக இருக்கவேண்டியதும் அவசியம்.**

# வேதாளம் முருங்கை மரம் ஏறும்

என். சத்திய மூர்த்தி



ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாசா, ஆட்டம் சூடு பிடிக்கும் முன்னரே 'செல்ப் கோல்' அடித்துள்ளார். அண்மையில் வடமாகாணம் வந்த போது பதிமூன்றாவது திருத்தம் குறித்த அவரது உறுதியான நிலைபாடு அடுத்த நாளே காற்றோடு கலந்துபோனதைத் தொடர்ந்து, அவருக்கு கிடைக்கவிருந்த தமிழர் வாக்குகள் இல்லாமலே போய்விடுமோ என்று தோன்றுகிறது.

இதன் காரணமாகவும் தமிழர்களிடையே 'பொது வேட்பாளர்' கோரிக்கைக்கான ஆதரவாளர்களின் கரம் வலுப்பெறும் வாய்ப்புக்கள் அதிகம் எனலாம். அந்தக் கோரிக்கையை எதிர்க்கும் சுமந்திரன் போன்றோருக்கு, சஜித்தின் அந்தர் பல்டி, பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக நிலைமையை மாற்றி உள்ளது என்பதே உண்மை.



எது எப்படியோ, பொலிஸ், காணி அதிகாரங்கள் குறித்து தமிழர்களுக்கு உறுதி அளிப்பதற்காக சஜித் வட மாகாணம், குறிப்பாக யாழ்பாணத்திற்கு வருகை தந்தார். முதல் நாள், கிளிநொச்சி, அடுத்த தினம் யாழ்பாணம் என்று இரண்டு நகராங்களிலுமே, அவர் பதிமூன்று குறித்த தனது மே தின உறுதிமொழியில் உறுதியாக இருப்பதாகவே காட்டிக்கொண்டார்.

அதிலும் குறிப்பாக, தமிழ் அரசுக் கட்சியின் யாழ் அலுவலகத்திற்கு அவர் வருகை தந்தபோது, அங்கும் அவர், செய்தியாளர்களுக்கு பதிமூன்றை முழுவதுமாக நடைமுறைபடுத்துவது போன்ற விடயங்களில் தனது நிலைமை மாறாது என்று காட்டிக்கொண்டார். அதுவே அடுத்த நாள் தமிழ் மீடியாக்களிலும் பத்திரிகைகளிலும் முக்கிய செய்தியானது.

இதனைத் தொடர்ந்து, சஜித் பிரேமதாசா, முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிரேமசந்திரன் ஆகியோரையும் சந்தித்து தனது கருத்துக்களை முன் வைத்தார். அதாவது, பதிமூன்று குறித்த தனது உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து தமிழ் தரப்பினரும் தனக்கு ஆதரவு தர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

### புதிய வியாக்கியானம்

ஆனால், நடந்தது என்ன? சஜித் வடக்கில் ஒரு சொல் சொன்னதை தொடர்ந்து, அவரது நிலைபாடு மாறியுள்ளது. அல்லது அவரது கட்சியில் மூத்த தலைவர்கள் சிலருக்கு அவரது நிலைபாடு ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கவில்லை.

இது வழமையாக தென்னிலங்கை தலைவர்களிடம் எதிர்பார்க்கப்பட வேண்டிய மாற்றமே. தலைக்கு ஒன்று, வாலுக்கு ஒன்று என்று இரண்டு நாக்குகளில் பேசுவது அவர்களுக்கே உரிய கலை. என்றாலும் அதே கலையை தானே விடுதலை புலிகள் அமைப்பும் கடைபிடித்து வந்தது? தங்களுடைய அறிக்கையில் தமிழ் மொழியில் ஒரு வகையான கூற்று. சர்வதேசத்திற்கான ஆங்கில மொழி மாற்றத்தில் வேறொரு விதமான சொல்லாடல்...

இன்று, தமிழர் தலைமையிடம் அந்த இரண்டுங்கெட்டான் விளையாட்டு இல்லை. என்றாலும், தென்னிலங்கை தலைவர்கள் அதனை விடுவதாக இல்லை.

அப்படித்தான், சஜித் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மரிக்கார், பொலிஸ் அதிகாரம் குறித்து புதிய வியாக்கியானம் ஒன்றை கொடுத்துள்ளார். அதாவது, பொலிஸ் அதிகாரம் என்று சஜித் கூறியது, சமூக காவல் போன்ற அமைப்பு குறித்து மட்டுமே என்பது மரிக்காரின் விளக்கம். சஜித்தின் அகராதியில், பொலிஸ் அதிகாரம் என்று தமிழர்கள் எதிர்பார்ப்பது கிடைக்காது என்பதுதான்.

மரக்கார் தான் தோன்றிதனமாக கொழும்பு பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு கூறியிருப்பார் என்று கருத முடியாது. வட மாகாணத்தில் தான் கூறி வந்த கருத்துக்கு தெற்கே எதிர்வினை தோன்றும் என்று சஜித் கருதியதாலே அவ்வாறான நிலையை அல்லது நிலைபாடு மாற்றத்தை மரிக்கார் தெரிவித்தார். அதற்கு சஜித்தின் ஆதரவும் ஆசிர்வாதமும் இருந்தது. இதுவே உண்மை.

அவ்வாறு இல்லையென்றால், அது குறித்து சஜித், தனது கட்சியின் நிலைபாட்டை தெளிவாக ஓர் அறிக்கை மூலாக தெரிவிக்கவேண்டும். இதனைத்தான், விக்னேஸ்வரனும் அவரிடம் கூறியதாக பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதாவது, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்த தனது நிலையை, சஜித் எழுத்து வடிவத்தில் ஒரு அறிக்கையாகவே வெளியிட வேண்டும் என்பதே விக்னேஸ்வரனின் கோரிக்கையாக இருந்தது. அதனை, அவர், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே சமயத்தில் வெளியிடுவது மட்டுமே அவரது நம்பகதன்மையை அதிகரிக்கும்.

### வெத்து வேட்டு

சஜித் பிரேமதாசவை தொடர்ந்து, ஜேவிபி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திசநாயக்காவும் , யாழ்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சி தலைவர்களை சந்தித்தார். அப்போது அவர் பதிமூன்று குறித்த தனது நிலைபாட்டில் மாற்றம் இல்லை என்று தெரிவித்தார். அதாவது, புதிதாக அரசமைப்பு சட்டம் வரையப்பட வேண்டும். அதுவரை, மாகாண சபைகளும் அதற்கான தற்போதைய பதிமூன்று சார்ந்த அதிகாரங்களும் தொடரும் என்பதே அவரது கூற்று.

உண்மையைச் சொல்லப்போனால், அநுர கூறியது வெறும் சப்பைக்கட்டு. வெத்துவேட்டு. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிற்போடப்பட்ட

மாகாணசபை தேர்தல்களை உடனடியாக நடத்துவோம் என்று மட்டும் அவர் கூறியிருந்தால் போதுமானது. (5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# வேதாளம் முருங்கை மரம் ஏறும்.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

புதிதான அரசமைப்பு சட்டம் உருவாக்குவது வரை, முன்பிருந்த அதிகாரங்கள் தொடரும் என்பது அவர் சொல்லாமலே தெரியும். ஆனால். அவர் நிலைப்பாட்டின்படி, உடனடியாக பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாண அரசிற்கு கிடைக்குமா, இல்லையா என்பது குறித்து அவர் கருத்து கூறவில்லை. அவருடன் கலந்துரையாடிய தமிழ் அரசுக் கட்சி பிரதானிகளும் அந்தக் கேள்வியை அவர் முன் வைக்கவில்லை. அல்லது அவ்வாறே தற்போது தோன்றகிறது.

யாழ்பாணம் வந்த அநுர, புளொட் தலைவர் சித்தார்தனையும் சந்தித்து உரையாடினார் என்று செய்திகள் தெரிவித்தன. அவர்கள் இருவரும் என்ன கதைத்தார்கள் என்பது தெரியவில்லை. என்றாலும், ஜனாதிபதி தேர்தலில் தனக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றே சஜித் தான் சந்தித்த தமிழ் தலைவர்கள் அனைவரிடமும் கோரிக்கை வைத்திருப்பார். ஆனால், யாரையோ தேள் கடித்ததில் யாருக்கோ நெறி கட்டிய கதையாக, அநுர தமிழர் கட்சிகளுடன் நடத்திய பேச்சு குறித்து, சஜித் கட்சி தலைவர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து தெரிவித்துள்ளார்.

அதாவது, அநுரவின் வாக்குறுதிகளை நம்பி அவருக்கு தமிழர்கள் வாக்களிப்பதாக தீர்மானம் எடுக்கக்கூடாது என்று அவர் கொழும்பு பத்திரிகையாளர்களிடம் கருத்து தெரிவித்துள்ளார். அத்தநாயக்க சஜித் கூறாமல் இவ்வாறெல்லாம் பேச மாட்டார்.

## பொது வேட்பாளர்

பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் குறித்து சஜித் தனது நிலைபாட்டை தெளிவுபடுத்தும்வரை, தமிழர்கள் தற்போதும் எப்போதும் அவரை சந்தேகத்துடனேயே பார்ப்பார்கள். அது மட்டுமல்ல. அவர் தனது நிலைபாட்டை தென்னிலங்கைக்கும் தெளிவுபடுத்தவேண்டும். இல்லை என்றால், தற்போது ஒன்றைக் கூறிவிட்டு, பின்னர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தனது நாடாளுமன்ற உறுப்பினர்களே, தனது நிலையை ஆதரிக்கவில்லை என்று புதிதாகக் கதையை அவிழ்த்து விடலாம்.

அதாவது, சஜித் பதிமூன்று மற்றும் தமிழர் உரிமைகள் குறித்து மனதார இந்த மாற்றங்களை விரும்புகிறார் என்று அவர் தமிழர்களை நம்ப வைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். அதனை அவர் எவ்வளவு வெற்றிகரமாக செய்து முடிக்கிறார் என்பதிலேயே அவரது வெற்றிவாய்ப்பு மட்டுமல்ல, தமிழர்களின் பொது வேட்பாளர் பிரச்சினைக்கான முடிவும் ஒளிந்துள்ளது.

சஜித் பிரேமதாசா தமிழ் மக்களில் பெருவாரியானவர்களை நம்ப வைத்து விட்டார் என்றால், அன்றே பொது வேட்பாளர் குறித்த கோரிக்கைகள் சுதி இறங்கிவிடும். மாறாக, அவர் தொடர்ந்து தென்னிலங்கையின் உள் ஒன்று வைத்து, புறம் ஒன்று பேசும் அரசியல்வாதியாகவே தொடர்ந்தால் தமிழ் மக்களிடையேயும் அவர் மீதான நம்பிக்கையின்மை மேலோங்கி விடும்.

திடீரென்று தமிழர்களில் சிலர் அவரது தந்தை ஜனாதிபதி ரணசிங்கே பிரேமதாசா தங்களை ஏமாற்றிய கதைகளை கட்டவிழ்த்துவிடத் தொடங்குவார்கள். அதனை, அரசியலில் இன்னமும் ஆர்வம் இருக்கும் தமிழ் இளைஞர்களும் நம்புவார்கள்.

## பிரிந்தே இருக்கிறது

அதன் பின்னர், தற்போது, பொது வேட்பாளர் வேண்டாம் என்ற சம்மந்தன், சுமந்திரன் போன்றோரின் சொல் எடுபடாது. அதிலும் குறிப்பாக, சஜித் மற்றும் அநுர ஆகியோருடனான தமிழ் அரசுக் கட்சியின் பேச்சுக்களில் சிறிதரன் பங்கு பெறவில்லை என்ற நிலையில், அந்தக் கட்சி தொடர்ந்து இந்தப் பிரச்சினையில் பிரிந்தே இருக்கிறது என்றே கூற வேண்டும்.

பத்திரிகை செய்திகளின்படி, சிறிதரன் வெளிநாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது. நீதி மன்றத்தில் தற்போது ஊசலாடிக் கொண்டிருந்தாலும், அவர் தமிழ் அரசு கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்ற வகையில் அவரும் பங்குபெறும் வண்ணமே இது போன்ற பேச்சுக்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

இனி, சஜித் மற்றும் அநுர ஆகியோர், தனினத்தனியாக சிறிதரனோடு பேசினாலும், கட்சியின் அனைத்து தலைவர்களும் ஒருமித்து பேசுவதற்கு அது இணையாகாது. அதிலும் குறிப்பாக, அத்தகைய பேச்சு நடந்தால், இதில் யார்- யார் எத்தனை சதவீதம் உண்மை பேசுகிறார்கள் என்பதும் கேள்விக்குறியாகிவிடும்.

சஜித் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் குறித்த தனது நிலையை தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தும் வரை, தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட முடியாது. அவரது இரட்டை நிலை தொடர்ந்தால், அதுவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவிற்குச் சாதகமாகி போகிவிடும்.

தற்போது, பொலிஸ், காணி அதிகாரங்கள் குறித்த பிரச்சினை எழுவதற்கு காரணமே, ஜனாதிபதி ரணில், முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரனிடம் முன்வைத்த கேள்விதான். அதன் பிரகாரம், தமிழர்கள், குறிப்பாக விக்கினேஸ்வரன், சஜித்தின் மே தின அறிவிப்பை நேரடியாக உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதே ரணிலின் கோரிக்கையாக இருந்தது.

அதற்காகவே சஜித் வட மாகாணத்திற்கு வருகை தந்தார் எனலாம். என்றாலும், அவரது கட்சியைச் சார்ந்த மரிக்காரின் கொழும்பு ஊடகவியலாளர்களுக்கான கூற்று சஜித்தின் நிலைமையை பொய்ப்பிப்பதாக அமைந்து விட்டது.

## தலையா -பூவா

ராஜபக்சாக்களின் ஆதரவை தொடர்ந்து பெற்றுக கொள்ளும் வரை, தமிழர்கள் தனக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதை ரணில் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார். எனவே, தமிழர்களின் தனி வேட்பாளர் என்ற முடிவு அவருக்குத் தேவையான ஒன்று. இந்தப் பின்னணியில், சஜித் தொடர்ந்து, தலையா -பூவா விளையாட்டைத் தொடருவாரானால், அவர் ரணிலின் தாளத்திற்கே ஆட்டம் போடுகிறார்.

இதற்கு அப்பாலும், சஜித்தும் சரி, அநுர குமாராவும் சரி, இது வரை வடக்கு- கிழக்கு மீள் இணைப்புக் குறித்துத் தங்களது எண்ணங்களைத் தெளிவுபடுத்தவில்லை. அவர்கள் அறியாத அல்லது மறந்துவிட்ட ஒரு விடயம் உள்ளது. விடுதலை புலிகள் அமைப்பை போன்றே, தற்போதைய மிதவாதத் தமிழர் தலைமைகளும், தங்களது கோரிக்கைகளை ஒன்றுக்கு பின் ஒன்றாக தெரிவித்து, தென்னிலங்கை தரப்பினரை விரக்தியின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிடுவார்கள்.

பின்னர், தமிழர் தலைமைகளே, தென்னிலங்கை தரப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச தலைமையும் தான் இனப் பிரச்சினைக்கான தீர்வை இன்னமும் இழுத்தடிக்கிறது என்று தாங்களும் நம்பி, சர்வதேச சமூகத்தையும் நம்ப வைப்பாகள்.

இனப்பிரச்சினை என்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறி விடும். சரிதானே?


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# மனித நேயம் காப்போம்

இந்த உலகில் தனியாக யாரும் வாழ முடியாது. ஒருவருக்கொருவர் உதவி செய்து மனிதநேயத்துடன் இருந்தால் தான் உந்த உலகத்தில் வாழ முடியும் . மனிதன் என்பது வெறும் வார்த்தையல்ல. இயற்கையினுடைய மிகப பெரிய படைப்பு. மனிதநேயம் என்றாலே மக்கள் மனதில் முதலில் நினைவுக்கு வருவது அன்னை தெரசா, ஹெலன் கெல்லர், நெல்சன் மண்டேலா போன்ற பெண்மணிகள் தான். ஏன் இவர்களை மட்டும் கூறவேண்டுமென்றால் அவர்களுடைய வாழ்க்கை முழுவதையும் உலகத்திற்காக அர்பணித்தவர்கள். அந்த அளவிற்கு நம்மால் போகமுடியவில்லை என்றாலும் நமக்கு எதிரே நடக்கும் நிகழ்வுகளில் உதவி தேவைப்படுவோருக்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்து வந்தாலே அதுவே ஒரு மனித நேயம் தான். நமது உலகத்தில் மனித நேயம் என்பது





ஒன்று இல்லாமல் இருந்திருந்தால் உலகம் எப்போதோ அழிந்திருக்கும். உலகில் வாழக்கூடிய முகம் தெரியாத நபர்கள் நம்மை பார்த்து சிரிப்பது கூட ஒரு மனிதநேயம் தான். மனிதநேயம் என்பது சக மனிதர்களின் மீது பாசம் வைப்பது, கருணை, இரக்கம் காட்டுவது போன்றதாகும். மனிதர்கள் என்றாலே அவர்களுக்கு பிரச்சனை இருப்பது இயல்புதான். அந்த பிரச்சனைகளை பார்த்துவிட்டு அவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியினை செய்யலாம், பசியால் வாடுபவர்களுக்கு உணவு வாங்கி கொடுக்கலாம், தாகத்தில் தவிப்பவர்களுக்கு நீர் கொடுத்தல், இது போன்ற மனிதநேயமிக்க செயல்களை செய்தால் மனிதருக்குள் ஒற்றுமை நிலை அதிகரிக்கும். சுயநலம் இல்லாமல் பிறர் நலத்தினை காக்க வேண்டும் என்பதில் நம் தமிழர்கள் முன்னோடியாக விளங்கியவர்கள். மனிதநேயத்திற்கு மிகவும் எடுத்துக்காட்டாக விளங்கிய நூல் திருக்குறள். மேலும் மனுநீதி சோழன் ஒரு பசுவின் கன்றிற்காக தன் மகனையேதண்டித்தவன், சிபி சக்கரவர்த்தி புறாவுக்காக தன் உடலையே தானம் செய்ததும், பாரி மன்னன் முல்லைலக்காக தேர் கொடுத்தமையும், பேக மன்னன் மயிலிற்காக போர்வை அளித்ததும் வரலாற்றில் மாறாது இருந்து வந்த தமிழர்களின் மனிதநேயம் ஆகும். முன்னெல்லாம் பிறந்தநாள் விழாவினை தன் குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாடுவதையே விரும்புவார்கள். இப்போதெல்லாம் அந்த நிலை மாறி ஆதரவற்றோர் விடுதிகளில் இருக்கும் குழந்தைகளோடு கொண்டாடவே பெரும்பாலானோர் விரும்புகிறாரக்ள். இந்த அளவிற்கு மனிதநேயமானது மாற்றம் அடைந்துள்ளது. மனிதநேயம் உயர்வாக உள்ள மனிதர்கள் இதயத்தால் யோசித்து புத்தியினால் அதை உணரவும் செய்வார்கள். அடுத்தவர்களுடைய குடும்பத்தை மாசில்லாத மனதோடு பார்ப்பது கூடு மனிதநேயம் தான். இதுபோன்ற மனிதநேயத்தை பற்றி கூறினால் அளவிற்கு அதிகமாக சொல்லிக்கொண்டே போகலாம். மனிதநேயத்திற்கு இணையான பொருளோ, செல்வமோ இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை. அதனால் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் மனிதநேயத்தை காத்து மனிதநேயத்துடன் இருப்போம்..

தெய்வேந்திரம் வஜிதா



## ஊடகவியலாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்திய பெற்றோல் கொண்டுவரப்பட்ட கொள்கலனில் இருந்து இருவரின் கைரேகை அடையாளங்களை அவர்கள் பெற்றுள்ளனர்.

வன்முறையில் ஈடுபட்ட கும்பல் வீதியூடாக தப்பிச்சென்ற சிசிரிவி காணொளிகள் பொலிசாருக்கு கிடைத்துள்ளன.இவற்றைக்கொண்டு பொலிசார் பல கோணங்களிலும் விசாரணைகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தை தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன் ஊடகவியலாளரின் ஊடக வியலாளரின் வீட்டிற்கு வருகை தந்து நேரில் பார்வையிட்டதுடன், ஊடகவியலாளருக்கு ஆறுதல் தெரிவித்தார். தாக்குதலைக் கண்டித்தஅவர்,ஊடகவியலாளருக்கு அச்சத்தினை ஏற்படுத்தும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் அரச தரப்பினர், உரிய அதிகாரிகள் உடனடியாகசட்டநடவடிக்கைஎடுக்க வேண்டும்எனவும்வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி. வி.கே.சிவஞானமும் சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்து தாக்குதலைக் கண்டித்தார். குற்றவாளிகள் இனம் காணப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். செய்தி தொடர்பில் பிரச்சனைகள்இருப்பின்அதுகுறித்து நேரில் பேசித் தீர்க்கப்படவேண்டும் என்றும் வன்முறை என்றும் தீர்வாகாது என்ற கருத்தினையும் முன்வைத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வகுமார் குறித்த தாக்குதலுக்குக்கண்டனம்வெளியிட் டதுடன் சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப் பட்டு நீதிமன்றத்தின் முன்நிறுத்தப் படவேண்டும்எனவலியுறுத்தினார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவனும் ஊடகவியலாளரின் தாக்கப்பட்ட வீட்டிற்கு நேரில் வருகை தந்து நிலமைகளைப் பார்வையிட்டார். வடமாகாணத்தில் தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பற்ற சூழலியே தமது சேவையினை முன்னெடுக்கின்றார்கள் என்று சுட்டக்காட்டினார்.

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பானநீதியானவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுதண்டனைகள் வழங்கப்பட்டிருக்குமானால்இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றிருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை முன்னெடுத்துள்ள செயற்திட்டம் வெற்றிகரமான நிலையில் காணப்படுகிறது. மூன்றாம் தவணை நிதி விடுவிப்பு தொடர்பில் இரண்டாம் மீளாய்வுக் கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குச் சாதகமான தீர்மானத்தையே எடுத்துள்ளது.

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த சகல தரப்புகளும் கடைப்பிடித்த தவறான பொருளாதாரக் கொள்கையினால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

வங்குரோத்து நிலைக்குப் பின்னரே 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதற்கமைய சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் செயற்திட்டத்தில் முதல் தவணை

தொடர்ச்சி 9ம் பக்கம்....



## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023ஆம் ஆண்டு மார்ச் மாதமும், இரண்டாம் தவணை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதமும் கிடைக்கப் பெற்றன.

மூன்றாவது தவணையாக 336 மில்லியன் டொலர் விடுவிப்புக்கு நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதி வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட 48 மாதகால செயற்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இதுவரையில் ஒரு பில்லியன் டொலர் வரை நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள செயற்திட்டங்களை நாணய நிதியம் வரவேற்றுள்ளது. மறுசீரமைப்புக்களினால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நிதிநிலைமை ஸ்திரமடைந்துள்ளதையும் நாணய நிதியம் ஏற்றுக் கொண்டுள்ளது.

2022ஆம் ஆண்டு காணப்பட்ட சமூககட்டமைப்பின் நிலவரத்துக்கும் தற்போதைய நிலைவரத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொருளாதார மீட்சிக்காக முன்னெடுத்த தீர்மானங்களினால் நாட்டு மக்கள் குறுகிய கால நெருக்கடிகளை எதிர்க்கொண்டார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து எவ்வாறு மீட்சி பெற வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை நாணய நிதியமே காண்பித்தது. சர்வதேச நாணய நிதியம் இலங்கையை ஆக்கிரமித்துள்ளதாக குறிப்பிடுவது அடிப்படையற்றது.

வங்குரோத்து நிலைக்குப் பின்னர் நாம் தான் நாணய நிதியத்தை நாடினோம். பலவந்தமான முறையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின் பின்னர் தான் இலங்கையின் நிதி கட்டமைப்பு ஸ்திரப்படுத்தப்பட்டு இலங்கையுடன் உலக நாடுகள் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுத்தன. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எரிபொருள் கப்பலுக்கு கடன் பற்று பத்திரம்கூட விநியோகிக்க முடியாத இக்கட்டான நிலையில் நாடு இருந்ததை எவரும் மறந்துவிடக்கூடாது.

சர்வதேச பிணைமுறியாளர்கள் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் முன்வைத்த கடுமையான நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்டதன் பின்னரே மூன்றாம் கட்ட தவணை விடுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சி குறிப்பிடுவது அடிப்படையற்றது.

ஒவ்வொரு தவணைக்கும் புதிதாக நிபந்தனைகள் வகுக்கப்படுவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான செயற்திட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் மூன்று நாட்கள் விவாதம் இடம்பெற்றது. இதன்போது பல விடயங்கள் ஆராயப்பட்டன.

சர்வதேச பிணைமுறியாளர்களுடன் இடம்பெற்ற முதல் கட்ட பேச்சு எவ்வித தீர்மானங்களுமின்றி நிறைவடைந்தது. இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியமும், இலங்கையின் பிரதான நிலை கடன் வழங்குநர்களும் தலையிட்டு அடுத்தக்கட்ட பேச்சுக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய சர்வதேச பிணைமுறியாளர்கள் உறுதியான இணக்கப்பாட்டுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

கடன் சமனிலை மற்றும் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாணய நிதியத்துடனான செயற்திட்டங்களை ஒருபோதும் மாற்றியமைக்கப் போவதில்லை.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சாதகமான நிலைப்பாடு காணப்படுகிறது வெகுவிரைவில் வெளிநாட்டு அரசமுறைக் கடன் மறுசீரமைக்கப்படும் என்றார்.

## கிராம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் கிராமம் மற்றும் நகரங்களில் மீண்டும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கு ஆதரவளிப்பது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும். எனவே மக்களுக்கான கடமைகளை நிறைவேற்ற முடியுமான இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நமது கடமையை செய்ய வேண்டும்.

இந்த அமைச்சை பொறுப்பேற்ற போது நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால் நாம் தற்போது அரச சேவையை படிப்படியாக வலுப்படுத்தியுள்ளோம். அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாத நிலை காணப்பட்டது. தற்போது 1942 கிராம சேவைப் பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக கிராம உத்தியோகத்தர்களின் சேவையாப்பு பிரச்சினை காணப்பட்டது. அதற்காக முன்வைக்கப்பட்ட புதிய சேவையாப்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், அதில் திருத்தங்கள் செய்யவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கையின் போது, நாட்டில் இடர் நிலை ஏற்பட்டது. ஆனால் நாட்டிலுள்ள பெரும்பான்மையான கிராம உத்தியோகத்தர்கள் உட்பட அரச அதிகாரிகள் அந்த நேரத்தில் முன் வந்து தமது கடமைகளைச் செய்ததற்காக அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். நாடு முழுவதும் கிராமிய உணவுப் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் போசாக்குக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதால், மக்களுக்குப் பாதுகாப்பான உணவை வழங்க முடிந்துள்ளது என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# திருக்கோவில் அரச அதிபர் முன்னிலையில் இரண்டாம் கட்ட அரிசி விநியோக நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட அரிசி வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# மனைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேலைத்திட்டம்

(எம்.ஏ.றமீஸ்)

தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் மனைப் பொருளாதார அபிவிருத்தி ஆகிய வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளில் மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் விவசாயத் திணைக்களத்தின் மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடு தழுவிய ரீதியில உள்ள கிராம மட்டங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, ஒலுவில் நுஜா மகளிர் விவசாய விரிவாக்கல் அமைப்பின் மூலம் மனைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் 'கை வினைப் பொருள்கள் தயாரிக்கும் விஷேட பயிற்சிகள்' ஒலுவில் பிரதேசத்தில் புதன்கிழமை இடம்பெற்றன.

அமைப்பின் தலைவி ஏ.எல்.நயிமா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது அம்பாறை விவசாய விரிவாக்கல் பயிற்சிப் பிரிவின் வளவாளர் எஸ்.ஜீவிதா பிரதம வளவாளராகக் கலந்துகொண்டு இல்லத் தலைவிகளுக்கும் யுவதிகளுக்குமான பயிற்சிகளை வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் கே.ஏ.கே.எஸ்.லக்மால் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வின் போது தலைமை விவசாய போதனாசிரியர் ஆர்.விஜயராகவன், விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பி.நிரோசன் உள்ளிட்ட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளில் இலகுவில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு காலத்திற்கு ஏற்ற வகையில் அனைவரும் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களைக் குறைந்த செலவில் சுகாதார முறையில் உற்பத்தி செய்யும் பயிற்சிகள் பல வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் வீடுகளில் இருந்தவாறு போஷாக்கான உணவு உற்பத்தியை மேற்கொள்வதோடு, வாழ்க்கைச் செலவினைக் குறைத்து நச்சுப் பொருளற்ற சுற்றாடல் நேயம் மிக்க உணவு உற்பத்தியின் பால் மக்களை வழிப்படுத்தும் இச்செயற்றிட்டத்தின் கீழ் ஒலுவில் பிரதேச மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் இவ்வேலைத் திட்டத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர். (05)

# வங்கி மற்றும் நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் மாநாடு கிளிநொச்சியில்

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் மாநாடு ஒன்று புதன்கிழமை பிற்பகல் 7 மணியளவில் தனியார் மண்டபம் ஒன்றில் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நிகழ்வில், சுனில்கந்துநெத்தி, சந்திரசேகரன், சமீர அல்விஸ் உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு சமகால அரசியல் தொடர்பில் மாநாட்டில் உரையாற்றினர். கிளிநொச்சியில் உள்ள வங்கி மற்றும் நிதி நிறுவன ஊழியர்கள் உள்ளிட்ட பலரை ஒருங்கிணைத்து குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. (05 - 113)

# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மர நடுகையும், சிரமதான நிகழ்வும்






(எம் சியாஜ் )

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புத்தளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மர நடுகை வேலைத்திட்டமும், சிரமதானப்பணியும் கடந்த செவ்வாய்க்கிழமை புத்தளம் ரத்மல்யாய கிராம சேவகப்பிரிவில் நடைப்பெற்றது.

புத்தளம் ரத்மல்யாயா கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் தௌபீகா தலைமையில் நடைப்பெற்றதுடன் , சமூக ஆர்வலரும், புத்தளம் மத்தியஸ்த சபை அதிகாரியுமான முஜாஹித் நிஸார் முதல் மரக்கன்றை நாட்டி வைத்தார். சிட்டி போயிஸ் சமூக அமைப்பு , அப்பிரதேசத்தின் மகளிர் அமைப்பின் உதவியுடன்

செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்பிரதேசத்தின் பொருளாதர அபிவிருத்தி உத்தியோகத்தர் பார்த்தீபன், சமுர்த்தி அபிவிருத்தி திருமதி ரினூஸா வழிகாட்டலால் வெற்றிகரமாக நடைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்பு: 10 பேர் கைதுதாகிப் பிணையில் விடுவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச் )

*திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு சனிக்கிழமை பாறை உடைப்பு இயந்திரத்துடன் உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன.*

*ஆனால் செவ்வாய்க்கிழமை காலை 9.45 மணிக்கு மீண்டும் மலை உடைப்பு வேலைகளை ஆரம்பித்த போது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர் பாறை உடைப்பு இயந்திரம் வேலைகளை ஆரம்பித்த போது அப்பகுதி மக்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று எதிர்ப்பை வெளியீட்டனர்*

*இதன் போது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 81 கீழ் சமாதான குலவை ஏற்படுத்தக்கூடிய செயல் ஒன்றை செய்த அடிப்படையில் சம்பூர் பொலிஸார் 10 பேரை செவ்வாய்க்கிழமை கைது செய்து பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.*

*விடுவிக்கப்பட்ட 10 பேரும் மூதூர் நீதிமன்ற நீதிமன்றில் புதன்கிழமை மதியம் 12.20 மணிக்கு ஆஜராகினர். நீதிமன்றம் இவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் விடுவித்ததோடு குறித்த பிரதேசத்தை இம் மாதம் 15 ஆம் திகதியன்று நீதிவான் பார்வையிடுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.*

*10 பேருக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு. முகுந்தன், ந. மோகன் ஆகியோர் ஆஜர் ஆகியிருந்தனர். (05)*

# டிஜிற்றல் ஊடக முக்கியத்துவம் செயலமர்வு





*(நூருல் ஹூதா உமர் )*

*'டிஜிட்டல் ஊடகத்தின் முக்கியத்துவம்' எனும் தொனிப்பொருளில் டிஜிட்டல் ஊடகம் மற்றும் இதழியல் கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்த செயலமர்வு கொழும்பு 07, நியூ டவுன் ஹால் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் அந்த நிறுவனத்துடன் இணைந்து எதிர்கால மாணவ சந்ததிகளுக்காக தொடர்ந்து ஆற்றிவரும் பங்களிப்பிற்காக டிஜிற்றல் ஊடகம் மற்றும் பத்திரிகை கல்வி நிறுவனத்தால் இதன்போது கௌரவிக்கப்பட்டார். (05)*

# போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு உலுக்குளம் பொலிஸார் பயிற்சி

வவுனியாவில் பாடசாலை நேரத்தில் போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு உலுக்குளம் பொலிஸாரால் விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு ஒன்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் அமைந்துள்ள அல் இக்பால் மகாவித்தியாலய மாணவர்களுக்கே குறித்த பயிற்சி திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பாடசாலை முன்பாக காலை மற்றும் பாடசாலை நிறைவடையும் நேரம் என்பவற்றில் பொலிஸாருடன் இணைந்து போக்குவரத்து கண்காணிப்பு மற்றும் வீதிப் பாதுகாப்புக் கடமையில் மாணவர்களையும் ஈடுபடுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு குறித்த பயிற்சி பொலிஸாரால் வழங்கப்பட்டதுடன், மாணவர்கள் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் போது அணிவதற்கான சீருடைகளும் இதன் போது பொலிஸாரால் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் முதல்வர் ஏ.கே.உபைத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் உலுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், போக்குவரத்து பொலிஸார், பாடசாலையின் ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)

# வவுனியாவில் மாவா எனும் போதைப் பாக்கு விற்பனை

## தடுப்பு நடவடிக்கை இல்லை எனவும் தெரிவிப்பு

வவுனியாவில் மாவா எனப்படும் போதை கலந்த பாக்கு விற்பனை அதிகரித்து வருவதாக பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கி இருந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வவுனியா பூந்தோட்டம் வீதியில் தென்னந்தோட்டத்தடி மற்றும் பூந்தோட்டம் சாந்தி, கற்குழி, தேக்கவத்தை உட்பட வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான மாவா எனப்படும் போதை கலந்த பாக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கியிருந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளமையால் குறித்த பகுதிகளில் இளைஞர் குழுக்கள் அதிகளவில் கூடி நின்று குறித்த போதை பார்க்கைக் கொள்வனவு செய்து உண்பதை அவதானிக்க கூடியதாக இருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

107 என்கின்ற போதை ஒழிப்பு தொடர்பான யுக்திய நடவடிக்கைக்கான இலக்கங்கள் அறிவிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் இவ்வாறான விடயங்களைக் கண்டும் காணாது இருப்பதாகவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. (05 - 100)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகியதில் 35 மாணவர்கள் வைத்தியசாலையில்





தருமபுரம் மத்திய கல்லூரியில் பாடசாலை கற்றல் நடவடிக்கை ஆரமபிக்கப்டும்வேலை நாவல் மரம் ஒன்று பாரிய அளவிலான இருந்தா குளவி கூடு ஒன்று நேற்று (வியாழக்கிழமை) தாக்கத்துக்கு இலக்காகிய நிலையில் கலந்து சென்றதில் 35 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது 18 மாணவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதுடன் நான்கு ஆசிரியர்களும் குளவி கொட்டுக்கு இலக்காகி அதில் தற்பொழுது மூன்று ஆசிரியர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இச்சம்பவம் தொடர்பாக அனத்த முகாமத்துவ பிரிவினர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பொலீஸார் ஆகியோருக்கு வழங்கப்பட்ட தகவல் அமைவாக உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த குழுவினர் நேற்று அப்பகுதியில் இருக்கும் குளவி கூட்டினை எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தருமபுரம் மத்திய கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி அனைத்து மாணவர்களும் உடனடியாக பாடசாலை வளாகத்தில் இருந்து பாதுகாப்பாக வீடுகளுக்கும் உறவினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05 - 113)

# கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலராக அஸ்மி கடமையேற்பு

(அபு அலா)

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டு தனது கடமையை செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் - 1 அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்மி நிர்வாக சேவையில் இரு தசாப்தத்தை பூர்த்தி செய்துள்ளார். பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளராகவும், அக்கரைப்பற்று மாநகராட்சி ஆணையாளராகவும், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரும், பதிவாளருமாகவும் கடமையாற்றியதோடு இறுதியாக கல்முனை மாநகராட்சி ஆணையாளராக கடமையாற்றினார்.

இலங்கை நிர்வாக சேவையில் 20 வருடங்கள் கடந்து பயனிக்கும் இவர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளராக பதவி வகித்து கூட்டுறவுத்துறையை பிரகாசிக்கச் செய்தவர் என்ற வகையிலும் உள்ளூராட்சி நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய தலைமைத்துவ வழிகாட்டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு திறமைகள் என்பவற்றை கருத்திற்கொண்டும் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) நியமிக்கப்பட்டுள்ளார். (05)

# பிரதிப் பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்ற அஸ்மிக்கு கல்முனை மாநகர சபையில் கௌரவம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) பதவி உயர்வு பெற்றுள்ள கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியை கௌரவித்து, வாழ்த்தி மகிழ்வுறும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் முபீனா சம்சுல் அமான் ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.


இதன்போது ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை மாநகர சபை சமூகம் சார்பில் மாலைகள் அணிவித்து, பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாநகர சபையின் சிரேஷ்ட வருமானப் பரிசோதகர் ஏ.ஜே.சமீம் நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார். இந்திகழ்வில் மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜ/ன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உட்பட பிரிவுத் தலைவர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர். (05)

# விவசாய அமைச்சின் செயலராக சம்மாந்துறை நசீர் நியமனம்







(அபு அலா)

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, காணி நிர்வாகம், மீன்பிடி, உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் செயலாளராக சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எம்.நசீர் அமைச்சின் கடமைகளை திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தையுடைய இவர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) கடமையாற்றி வந்த நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் இவர் நியமிக்கப்பட்டார்.

29 வருட இலங்கை நிருவாக சேவை அனுபவம் கொண்ட இவர், லாகுகல மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளராகவும், சம்மாந்துறை, இறக்காமம், கல்முனை, பொத்துவில், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று போன்ற பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும், அம்பாறை மாவட்ட செயலகத்தில் மாவட்ட உதவி வறுமை நிவாரண ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

மேலும், பொது நிர்வாக அமைச்சு, வண ஜீவராசிகள் அமைச்சு, வட மத்திய மாகாண அமைச்சு போன்றவற்றின் மேலதிக செயலாளராகவும், கிழக்கு மாகாண பேரவையின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) போன்ற பல பதவிகளையும் வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த பைஷல் ஆப்தீன் நியமிக்கப்பட்டு அவரும் செவ்வாய்க்கிழமை கடமையேற்றுக்கொண்டார். (05)

# ஓய்வுபெறும் சுகாதார ஊழியர்கள் கௌரவிப்பு

(எஸ்.எம்.இத்ரீஸ்)

சுகாதார துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுச் சென்ற வவுனியா மாவட்ட ஊழியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு வவுனியா வைத்தியசாலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் தலைவர் விமலரத்ன, வட மாகாண சுகாதார பணிப்பாளர், வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர், வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்கள் நிர்வாக உத்தியோகஸ்தர் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்த தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவை

## விக்னேஸ்வரன் கூறுகிறார்



தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக உள்ள ஒரு தேசிய இனம் என்பதை சர்வதேசத்துக்கு காட்டுவதற்கு தமிழ் தேசியத்தை நிலைநிறுத்துவதற்கு பொதுவேட்பாளர் அவசியம் தேவை.

பொதுவேட்பாளரை நிறுத்துவதன் சாதக நிலைமைகள் பற்றி விக்னேஸ்வரன் ஊடக்களுக்கு அனுப்பிவைத்த வாராந்த கேள்வி பதில் என்ற பகுதியின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**கேள்வி:** "தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்த வேண்டும் என்று நீங்கள் கூறிவருவது ஏன்? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை? ஏன் அதைச் சிலர் எதிர்க்கின்றார்கள்?"

**பதில்:** தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்நிறுத்த வேண்டும் என்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் 2011 அளவில் இருந்து கூறி வந்தவர் ஆசிரியர் திருநாவுக்கரசு. (திரு மாஸ்டர்) அக் கோரிக்கை அப்பொழுது தமிழ் மக்களால் ஆழமாகச் சிந்திக்கப்படவில்லை. நண்பர் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் நின்றிருந்தாலும் தமிழ் மக்களின் ஒரு பிரதிநிதியாக தமிழ் மக்களால் அரங்கேற்றப்படவில்லை.

ஆனால் 2009 இன் பின்னரான வடக்கு கிழக்கு அரசியற் களம், மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் விடயத்தில் நடந்து கொண்டுவந்த விதம், நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டு வரப்பட்ட விதம், முதலமைச்சராக நான் பெற்றுக் கொண்ட அனுபவம், இவையாவும் என்னை சிந்திக்க வைத்தன.

உதாரணத்திற்கு 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அவரின் உத்தியோக பூர்வ வாஸஸ்தலத்தில் அவரின் அழைப்பின் பேரில் சுமந்திரனும் முதலமைச்சராக அப்போதிருந்த நானும் சந்தித்தோம். எமது மாகாணசபை சார்பான நடைமுறைக் கோரிக்கைகள் யாவை என்று அவர் கேட்டிருந்தார். நாம் அவற்றை எழுத்தில் இட்டு அவரிடம் கையளித்தோம். சுமார் பத்து பன்னிரண்டு விடயங்களைக் கோரியிருந்தோம். எல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்து எமக்கு அவற்றை நாம் கோரியவாறு நல்குவதாக அவரும் அவரின் செயலாளரான லலித்வீரதுங்கவும் பொறுப்பெடுத்தனர். நாமும் மகிழ்வுடன் விடைபெற்றுக் கொண்டோம்.

ஆனால் நாம் கோரிய எவையும் வழங்கப்படவில்லை. உதாரணத்திற்கு அப்போதிருந்த சிங்கள இராணுவ ஆளுநரை மாற்றி ஒரு தமிழ் பேசும் சிவில் சமூக பிரமுகரை அந்த இடத்திற்கு நியமிக்கும்படி கோரியிருந்தோம். அப்போதிருந்தவரின் காலம் ஜுலை மாதம் வரை நீடிக்கும் என்றும் அதன் பின்னர் எமது கோரிக்கை கட்டாயமாக நிறைவேற்றப்படும் என்றும் கூறியிருந்தார். நாம் ஜுலை வரை காத்திருந்தோம். திரும்பவும் அதே இராணுவ அலுவலரை ஜனாதிபதி மஹிந்த ஆளுநராக நியமித்தார்.

இவ்வாறு எமது கோரிக்கைகளுக்கு நேர்மாறாகவே மத்திய அரசாங்கம் நடந்து வந்து கொண்டிருப்பதை அவதானித்தேன். இந் நாட்டில் ஒரு இனவழியாட்சி நடைபெற்று வருவதை நான் அவதானித்தேன். தமிழ் மக்களின் காணிகள் அரசாங்க அனுசரணையுடன் பறிபோவதை அவதானித்தேன். வளங்கள் சூறையாடப்படுவதை அவதானித்தேன். எமக்கு 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சொற்ப அதிகாரங்களையும் மத்தி தன்வசம் ஆக்கிக் கொண்டதை அவதானித்தேன். வடக்கு கிழக்கு தமிழ் மக்களை ஒரு சிறுபான்மையினமாக மத்திய அரசாங்கம் கருதுவதையும் நாம் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையினர் என்பதை அவர்கள் பொருட்படுத்தாது இருப்பதையும் அவதானித்தேன். நாம் நல்லாட்சி காலத்திலும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டு வரப்பட்டதையும் அவதானித்தேன். அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மத்திய அரசாங்கத்தை நம்பி 'இதோ தீர்வு வருகின்றது' 'இதோ வந்துவிட்டது' என்று பல தடவைகள் கூறி வந்து ஏமாற்றப்பட்டதையும் அவதானித்தேன்.

அப்போதுதான் திரு மாஸ்டரின் கோரிக்கையை நான் பரிசீலித்துப் பார்த்து அதில் உள்ள நன்மைகளை உள்வாங்கியிருந்தேன். காலம் கனிந்த போது அதே கோரிக்கையை நானும் முன் வைத்தேன். அதனால் ஏற்படும் நன்மைகள் எவை என்று பரிசீலித்துப் பார்த்தோமானால் முதலாவதாக, தமிழ் பொது வேட்பாளரை முன்நிறுத்துவது வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு தேசம் என்ற உண்மையை வெளிக் கொண்டு வருவதாக அமையும்.

அதாவது தமிழ்த் தேசீயம் என்று நாம் கூறுவதின் அர்த்தத்தை வெளிக் கொண்டு வர இது ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும்.

தமிழ்த் தேசீயம் என்றால் என்ன? சிசிபிஆர் என்ற குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தின் உறுப்புரை ஒன்றின் கீழ் உலகின் 'மக்கள் குழாம்' ஒவ்வொன்றும் சுயநிர்ணய உரித்துக் கொண்டவர்கள் என்று கூறுகின்றது. 'மக்கள் குழாம்' என்று கூறும் போது அவர்களுக்கான சில தனித்துவங்கள் இருக்க வேண்டுமென்று சட்டம் எதிர்பார்க்கின்றது.

அதாவது குறித்த மக்கள் அல்லது மக்கள் கூட்டம் அல்லது மக்கள் குழாமானது அதன் உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் சில குணாதிசயங்களைப் பெற்றிருக்க வேண்டும். வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் சர்வதேச சட்டபடி ஒரு 'மக்கள் குழாம்' என்று ஏற்றுக் கொள்ள அவர்களுக்கிருக்கும் குணாதிசயங்கள் பலவுள்ளன. அவர்களுக்கென்று ஒரு பொது மொழியுண்டு. அது தமிழ் மொழி. அடுத்து குறிப்பிட்ட வாழ்நிலப் பரப்புண்டு. அது தான் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள். மேலும் குறிப்பிட்ட கலாசாரம் உண்டு வாழ்முறைகள் உள்ளன. அவர்களின் வாழ்விடங்கள் நாட்டின் மற்றைய பாகங்களில் இருந்து தப்வெப்பநிலை, நிலக் காட்சி, மண்ணியல், இடங்களின் தன்மை ஏன் மதங்கள் ரீதியாகவும் வேறுபட்டன.

வடக்கு கிழக்கில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களே பெரும்பான்மையினர். பௌத்தர்கள் அண்மையில் அங்கே குடியேற்றப்பட்டவர்கள். வடக்கு கிழக்கில் ஆறுகள் இல்லை. குளங்களும் கிணறுகளுமே உள்ளன.

எமது கலாசாரமும் பண்பாடும் எமது தமிழ் சூழலுக்கேற்ப எமது தமிழ் இலக்கிய எதிர்பார்ப்புக்களுக்கேற்ப தனித்துவமான வளர்ச்சி பெற்று வந்துள்ளன. வடக்கு கிழக்குத் தமிழர்கள் தனித்துவமானவர்கள் என்பதால் 'தேசம்' என்ற அடையாளத்தை சிசிபிஆரின் ஏற்பாடுகளுக்கேற்ப பெற உரித்துடையவர்கள். பல தடவைகள் வடக்கு கிழக்கு பிரதேசங்களாவன தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களே என்ற உண்மை, உடன்பாடுகளிலும் ஒப்பந்தங்களிலும் இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசீயம் எனும் போது வடக்கு கிழக்கு தாயகத்தில் தமிழர்கள் ஒரு மக்கட் குழாம் என்பதும் அவர்களுக்கு சுயநிர்ணய உரித்து இருக்கின்றது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படும். எமது தனித்துவமே தமிழ்த் தேசீயம். வடக்கு கிழக்கின் தனித்துவத்தை அடையாளம் காட்டாமலே தான் சிங்கள அரசியல்வாதிகள் இந் நாட்டிற்கு ஒற்றையாட்சி முறையைப் பெற்றுக் கொண்டனர். ஏழு மாகாணப் பெரும்பான்மையினர் இரு மாகாணப் பெரும்பான்மையினரைத் தம்முடன் சேர்த்து ஒன்பது மாகாண சிறுபான்மையினர் ஆக்கினர்.

ஒற்றையாட்சியைப் பெற்றதும் அவர்கள் இன ரீதியாக செயற்பட ஆரம்பித்தார்கள். எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்த போது, தாம் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகம் பற்றி உணர்ந்து கொண்டு தமிழ் மொழி நியாயமான பிரயோகம் என்ற சட்ட வரைவைக் கொண்டு வந்தார். ஆனால் புத்த பிக்குமார் சிலர் பண்டாரநாயக்கவின் ரொஸ்மிட் பிளேஸ் இல்லத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்து குறித்த சட்ட வரைவை அப்போதைய பிரததரை நிராகரிக்கச் செய்தனர்.

ஆகவே தமிழ் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்துவது நாம் ஒரு 'தேசம்' என்ற உண்மையை வெளிக் கொண்டு வர உதவும். நாம் எமது மாகாணங்களில் பெரும்பான்மையினர் என்ற அடையாளத்தை நிலை நிறுத்தும்.

அடுத்து சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழ் மக்கள் சிந்தித்து பலவித கருத்துப் பரிமாற்றங்களின் அடிப்படையில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை தேர்தலில் முன்நிறுத்துவது சிதறுண்டிருக்கும் வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் ஒன்றிணைய வழிவகுக்கும்.

எமது தமிழ்க் கட்சிகள் பல இருந்தாலும் அவற்றின் அரசியல் குறிக்கோள் ஒன்றே. அது இலங்கையின் ஒற்றையாட்சி முறையை மாற்றி அமைப்பதே. முன்னைய தமிழ் காங்கிரஸ் ஒற்றையாட்சி முறையை ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அதன் வழிநிற்கும் தமிழ் தேசிய மக்கள் கூட்டணி சமஷ்டி முறையையே தேர்ந்தெடுத்துள்ளது. எமது தமிழ் மக்கள் கூட்டணி கூட்டு சமஷ்டி முறையைத் தேர்ந்தெடுத்துள்ளது. எனினும் அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் யாவும் ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு எதிரானவை. அவ்வாறான பொதுக் குறிக்கோளை முன்வைத்து தமிழ்க் கட்சிகள் யாவும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும். தமிழ் மக்களிடையே ஓர் அடிப்படை ஒற்றுமையை ஏற்படுத்த தமிழ் பொது வேட்பாளர் வழி வகுப்பார்.

மூன்றாவதாக ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களுக்குத் தரப்படும் விசேட சலுகைகள், தமிழ்ப் பொது வேட்பாளர் அரச செலவில் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும், புலம்பெயர் மக்களையும், உலக நாடுகளின் மக்களையும் தொலைக்காட்சி மூலமாக சந்திக்க ஒரு வாய்ப்பளிக்கும். மும் மொழிகளிலும் தமிழ் பொது வேட்பாளர் பேசக் கூடியவர் என்றால் தமிழர்களுக்கு நேர்ந்த அனர்த்தம் பற்றியும் இழைக்கப்பட்ட அநீதி பற்றியும் யாவர் மத்தியிலும் வெளிக் கொண்டு வரலாம். முக்கியமாக சிங்கள மக்களினதும், சிங்கள மொழி பற்றியதுமான சில தொல்பொருளியல் விடயங்கள் சிங்கள மக்களை சென்றடைய தமிழ் பொது வேட்பாளர் அந்தஸ்து வழி வகுக்கும்.

நான்காவதாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தும் மற்றும் வெளிக் கொண்டுவரும் ஒரு களமாக தமிழ் பொது வேட்பாளர் நிலையை நாம் மாற்றலாம். முக்கியமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது மக்கள் தீர்ப்பை சர்வதேச வழி நடத்தல் ஊடாகப் பெற எத்தணிக்கின்றார்கள் என்ற கருத்தை ஊரறிய நாடறிய உலகறிய பறை சாற்ற தமிழ் பொது வேட்பாளர் உதவி புரிவார்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் மனோநிலை என்ன என்பதை வெளிக் கொண்டு வர மக்கள் தீர்ப்பானது உதவும். அதனை சர்வதேசம் நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளிக் கொண்டுவர தமிழ் பொது வேட்பாளர் உதவுவார். அவருக்குத் தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களிப்பதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலை எம் சார்பில் திசை மாற்றலாம். சிங்கள வேட்பாளர்கள் எவ்வெந்தக் கருத்துக்களை மக்கள் முன்வைத்தாலும் தமிழ் மக்களின் கருத்துக்கள், அபிலாஷைகள், குறிக்கோள்கள், எதிர்பார்ப்புக்கள் இவை தான் என்ற கொள்கை விளக்க அறிவிப்பை உலகறியச் செய்யலாம்.

எமது கொள்கை விளக்க உரைகள் தமிழ் மக்கள் பரந்து வாழும் நாடுகளில் எல்லாம் ஒளி, ஒலி மூலமாக எதிரொலிக்கும். வடக்கு கிழக்கினுள் சிறைபட்டிருக்கும் எமது சிந்தனைகள் உலகெங்கிலும் சிதறடித்துப் பறக்க தமிழ் பொது வேட்பாளர் உதவி புரிவார்.

ஐந்தாவதாக தமிழ் பொது வேட்பாளர் தேர்தலில் வெல்ல போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லை. போட்டி முடிவு அவருக்கு முக்கியமல்ல. போட்டியில் கலந்து கொண்டு மக்களை ஒன்றிணைப்பதே அவரின் கடமையாகும். இன்னாரை ஒரு பொது வேட்பாளராகத் தமிழர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்ற உண்மையே சிங்கள வேட்பாளர்கள் தமிழர்களுக்கு எது எதனைத் தருவார்கள் என்ற அவர்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிக் கொண்டு வர உதவும். அவற்றை வைத்துப் பேரம் பேச நாம் முனையக்கூடாது. அவர்களின் சிந்தனைகளை உத்தியோக பூர்வமாக சிங்கள வேட்பாளர்கள் வெளிக்கொண்டு வரச் செய்ய தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற அந்தஸ்து உதவி புரியும். தேர்தல் முடிந்து வெற்றியாளர் தெரிவிக்கப்பட்ட பின்னர் தேர்தலின் போது அவர் தமிழர்கள் பற்றி வெளிக் கொண்டு வந்த விடயங்களைத் தெரியப்படுத்தி அவரிடம் விளக்கம் கேட்கலாம். அவர்கள் தருவதாகக் கூறியவற்றைத் தரமறுத்தால் அவர்களின் இரட்டை வேடம் வெளிக் கொண்டுவரப்படலாம். ஆனால் பொது வேட்பாளரின் பங்கு யாவர்க்கும் எமது நிலைப்பாட்டையும் எதிர்பார்ப்புக்களையும் இந்தத் தேர்தலைத் தளமாக வைத்துத் தெரியப்படுத்துதலேயாகும்.

அடுத்து தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு ஏன் எதிர்ப்புக்கள் வெளிவந்துள்ளன என்பதை ஆராய்வோம்.

முதலில் சம்பந்தனின் 'ஒஸ்லோ உடன்பாடு' பற்றிப் பார்ப்போம். ஒஸ்லோ உடன்பாடு என்று எதுவுமே உண்மையில் இல்லை. அது இருதரப்பார் அறிவிப்பு அல்லது அறிக்கையாகும். இருதரப்பாராலும் இவ்வாறாக கூறப்பட்டது என்று பதிவிற்காக எழுத்தில் இடப்பட்ட ஓர் ஆவணமே அன்றி தரப்பாரிடையிலான உடன்பாடு அல்ல. அது தற்போது வழக்கொழிந்து போய்விட்டது. அதன் அடிப்படையில் அரசாங்கத்தை 'அப்படிச் செய்' 'இப்படிச் செய்' என்று நிர்ப்பந்திக்க முடியாது.

சம்பந்தன் இந்த தள்ளாத காலத்திலும் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதை எதிர்க்கின்றார் என்றால் அதறகான காரணங்கள் தமிழர்தம் அரசியல் காரணங்களாக இருக்க முடியாது. தமிழ் மக்கள் அதற்கான காரணங்களை ஊகித்து அறிய வேண்டும்.

அடுத்து சுமந்திரனின் அங்கலாய்ப்பு. பொது வேட்பாளரை நிறுத்துவது ஒரு விஷப் பரீட்சை என்பதே அவரின் கருத்து. காரணம் ஏற்கனவே சமஷ்டி வேண்டும் என்று கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன. பொது வேட்பாளருக்குப் போதிய ஆதரவு கிட்டாவிடில் எமது சமஷ்டித் தீர்வுக்கான அத்தியாவசியமும் பலமும் அடிபட்டுப் போய்விடும் என்பது அவரின் கருத்து.

இது ஓர் அத்திபாரமில்லாத அங்கலாய்ப்பு.

(10ஆம் பக்கம் பார்க்க...)

# தமிழ்த் தேசியத்தை ....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கை அன்றும் இருந்தது. இன்றும் இருக்கின்றது.

எமக்கு பிரிவினையோ சமஷ்டியோ கிடைக்கும் வரையில் அல்லது எமது பிரதேசங்கள் பிறிதொரு நாட்டின் ஆட்சிக்குக் கீழ் வரும் வரையில் என்றும் இருக்கும். அப்படி வந்தாலும் நாம் அங்கும் சமஷ்டியையே கேட்போம். பொது வேட்பாளரை நிறுத்துவதால் எமது சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகும் என்பது சுமந்திரனின் சட்டத்தரணி மூளையில் உதித்திருக்கும் ஒரு கற்பனைப்பிராந்தி. உண்மையில் எமது நிலையை இன்னும் ஸ்திரப்படுத்தி எம்மை சமஷ்டியை நோக்கி எடுத்துச் செல்ல வல்லதே தமிழ் பொது வேட்பாளர் என்ற பதவிநிலை. வடக்கு கிழக்கு மக்களின் மக்கள் தீர்ப்பைப் பெற சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும் என்று கோருவது எவ்வாறு சமஷ்டிக் கோரிக்கையை வலுவற்றதாக்கும்? நாம் சமஷ்டியைக் கோரி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தவில்லையே! நாம் எமது குறைகளை, நிலைகளை, நிர்ப்பந்தங்களை அகில உலகிற்கும் எடுத்துரைக்க உள்ளோம்.

'சமஷ்டியைத் தா' என்று தமிழ் பொது வேட்பாளர் கேட்கப் போவதாக யார் சுமந்திரனுக்குக் கூறினார்களோ நான் அறியேன்.

அடுத்து அவர் அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகளே இதனை முன்னெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆலோசனைகளை மட்டும் வழங்கலாம் என்றுள்ளார்.

ஒரு சமூகத்தின் சமூக சேவையாளர்கள் ஃ செயற்பாட்டாளர்கள் அரசியல்வாதிகளுக்கு வாக்குகள் வழங்கும் மக்களிடையே இருந்து வருகின்றவர்கள். அவர்கள் அன்னியர்கள் அல்லர். சுமந்திரன் மனதிலே ஒரு தப்பபிப்பிராயம் குடிகொண்டுள்ளது. ஒருவர் எப்பாடுபட்டாவது (அதாவது எந்த வித ஆரியக் கூத்தாடியாவது) நாடாளுமன்ற உறுப்பினராக வந்தால் அதன் பின் மக்களுக்குப் பேச இடமில்லை என்று நினைக்கின்றார். மக்களின் மனம் அறியாமல் அவர்களின் நல உரித்துக்களுக்கு எதிராக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நடந்து கொண்டால் அடுத்த தேர்தல் வரையில் மக்கள் அது பற்றி எதுவும் பேச முடியாது என்ற வகையில் அவரின் கருத்தை முன்வைத்துள்ளார். நாம் யாவரும் பணி செய்வது எமது தமிழ் மக்களின் இன்றைய மற்றும் வருங்கால நலன் கருதியே.

சுமந்திரன் கருத்துப்படி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலில் வென்றுவிட்டால் அவர் அடுத்த ஐந்து வருடங்களுக்கு தான் தோன்றித்தனமாய் நடந்து கொள்ளலாம் என்பதே. இவ்வாறு நினைத்தவர்கள் தான் தமது மக்களிடம் கேட்காமல் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துடன் கதைத்துப் பேசிப் பல சுய நன்மைகளைப் பெற்று வந்துள்ளார்கள்.

இன்று மக்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் சேர்ந்தே பொது தமிழ் வேட்பாளரை முன்நிறுத்த முன் வந்துள்ளார்கள். அதில் எந்தத் தவறும் இல்லை. மத்திய அரசில் பதவி வகிக்கும் ஒருவருக்கு ஜால்ரா அடிக்க எண்ணி தமது மக்களைப் புறக்கணிக்க முன்வருவோரை தமிழ்ச் சமூகம் மன்னிக்காது. மக்கள் சார்பில் இந்த செயற்பாட்டில் ஈடுபடுவதாக இருந்தால் சுமந்திரன் எம்முடன் சேர்ந்து பயணிக்கட்டும். இல்லையேல் ஒதுங்கியிருக்கட்டும். சிங்கள வேட்பாளர்கள் நலன் கருதி தமிழ் மக்களின் நலன்களை விற்காது இருக்குமாறு அன்புடன் அவரைக் கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (05)

# புத்தளம் சென் மேரிஸ் வித்திக்கு தண்ணீர் தாங்கி வழங்கி வைப்பு





(எம் சியாஜ்)

புத்தளம் சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு சமூக ஆர்வலர் முஜாஹித் நிசாரால் தண்ணீர் தாங்கி வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ். ஜெனட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதி அமைச்சின் மத்தியஸ்த சபை ஆணைக்குழு அதிகாரியும், சமூக ஆர்வலருமான முஜாஹித் நிஸார், பிரதேச இணைப்பாளரும், சமூக சேவையாளருமான முஹம்மது சபீர், பாடசாலை உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த தண்ணீர் தாங்கியை பெற்றுக கொடுக்க சமூக ஆர்வலர் முஜாஹித் நிசார் ஏற்பாடு செய்திருந்தார்.

மேலும் இந்த பாடசாலையில் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட தற்காலிக வகுப்பறையை புனர்நிர்மாணம் செய்வதற்கான ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டது. (05)





# விபத்தில் சிக்கி மூவர் இறப்பு

(எம்.ஏப்.றிபாஸ்)

பிபிலை - மஹியங்கனை பிரதான வீதியில் விபத்தில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

வான் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. புதன்கிழமை பிற்பகல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிபில - மஹியங்கனை பிரதான வீதியின் வேகம பிரதேசத்தில் இந்த கோர விபத்து இடம்பெற்றுள்ளது.(05)

# களுவாஞ்சிக்குடியில் புகைத்தல் -போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி மற்றும் வீதி நாடக நிகழ்வு





(வி.ரி.சகாதேவராஜா)

2024 ஆம் வருடத்திற்கான சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு பேரணி புதன்கிழமை இடம்பெற்றது. 'நண்பா போதைக்கும் புகைத்தலிற்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் மகிழூர்முனை சக்தி வித்தியாலய முன்றிலில் ஆரம்பமான பேரணியில் புகைத்தல் மற்றும் போதை பழக்கத்தால் ஏற்படும் பாதக விளைவுகளை குறிக்கும் பதாதைகளை ஏந்தி கோசங்களையெழுப்பிய வண்ணம் மகிழூர் பொது மைதானத்தை அடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. சிரேஷ்ட விரிவுரையாளர் க. மோகனதாசன் அவர்களின் நெறியாள்கையில் 'ஆடல் நிலம்' வழங்கிய 'விரல் இடுக்கில் கசியும் உயிர்' எனும் தலைப்பிலான புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு வீதி நாடகமானது கலந்துகொண்டோர் அனைவரினதும் வரவேற்பை பெற்றது. இந்த பேரணியில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். மேலும் குறித்த வீதி நாடகம் பிரதேச செயலக முன்றிலில் இடம்பெற்றதுடன், இதில் பங்குகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2024இல் வெளியிடப்பெற்றது